செந்தமிழ்

தொகுதி 85 செப்டம்பர் 91 பகுதி 3

காலாண்டு இதழ்

MADURAI TAMIL SANGAM மதுரைத் தமிழ்ச்சங்கம் THE MADURAI TAMIL SANGAM

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன், பி.ஏ.பி,எல்.

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் டாக்டர்
ந. பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்.டி.

பொருளடக்கம்

1. **இடைக்காலத் தமிழக வரலாற்றில் வைணவ சமய இலக்கிய வளர்ச்சி** 3
—டாக்டர். வே. இரா. மாதவன்
ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

2. **சீக்கியர்களின் பெயர் சூட்டும் சடங்குகள்** 16
-அ. நடராசன், ஆய்வாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

3. **இலக்கணங்களில் கலைச் சொல்லாக்கக் கூறுகள்** 24
—டாக்டர். சா. கிருட்டிண மூர்த்தி
அறிவியல் தமிழ்த்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

4. **தமிழெழுத்துக்களினது வடிவம்** 30
—ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை, யாழ்ப்பாணம்

5. **பழமொழிகள் புலப்படுத்தும் சமுதாய மதிப்புகள்** 33
—டாக்டர். தா. ஈசுவரபிள்ளை, இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

6. **சிறப்பகராதி வகைகள்** 38
—டாக்டர். ஏ. ஆதித்தன்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

7. **சங்க இலக்கியத்தில் பொருளியல் நோக்கு** 42
-டாக்டர். நா. பாலுசாமி, பொறுப்பாசிரியர்
செந்தமிழ், மதுரைத் தமிழ்ச் சங்கம்

8. **நூல் மதிப்புரை** 51
-டாக்டர். ம. திருமலை, தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

9. **நூல் மதிப்புரை** 52
—டாக்டர், ஆ. ஆனந்தராசன்
சைவசிந்தாந்தத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

இடைக்காலத் தமிழக வரலாற்றில் வைணவ சமய இலக்கிய வளர்ச்சி

டாக்டர் **வே. இரா. மாதவன்**

தமிழகத்தில் ஆழ்வார்கள் தோன்றிய பிறகு வைணவ சமயம் பெருவளர்ச்சி பெறத் தொடங்கியது. நாதமுனிக்குப் பின்வந்த இராமானுசரும் அவர்வழி வந்த வைணவ ஆசாரியர்களும் வைணவ சமய வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றினர். ஆயினும், இவர்களுடைய நூல்கள் பலவும் வடமொழியிலும் வடமொழியும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையிலும் அமைந்து விட்ட காரணத்தினால் தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள் பலர் இவர்களைப் பற்றி மிகுதியாக ஆராய்வதில்லை. திரு. மு. அருணாசலம் போன்ற ஒரு சிலரே இவர்களைப் பற்றித் தமிழில் அறிமுகப் படுத்தியுள்ளனர். இந்நிலையில், கி.பி. 12 முதல் 17 ஆம் நூற்றாண்டு வரையான தமிழ் இலக்கிய வரலாற்றில் வைணவ சமய இலக்கிய வளர்ச்சியை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டானது வைணவ சமய வரலாற்றில் மிகவும் முக்கியமான காலமாகும். சிறப்பு மிக்க வைணவ சமய ஆசிரியர் பலர் இக்காலத்தே தோன்றினர். இராமானுசரின் சீடர்களாக விளங்கிய திருஅரங்கத்தமுதனார் (கி.பி. 1100-1208), அருளாளப் பெருமான் எம்பெருமானார், திருக்குருகைப் பிரான் பிள்ளான் போன்றோர் பல நூல்களை அருளினர்.

திருவரங்கத்தமுதனார்

பெரியகோயில் நம்பி என்று அழைக்கப்பெறும் திருஅரங்கத்தமுதனார் பாடிய இராமானுச நூற்றந்தாதி வைணவர்களால் பெரிதும் போற்றப் பெறுவதாகும். கடவுளையே சரணாக வுள்ளவனுக்குரிய 108 காயத்திரி மந்திரம் போலவே இப் பாடல்கள் கருதப் பெறுவதாலும், ஆழ்வார்களின் கால முறையைக் காட்டுவதாலும் இந்நூலை இராமானுசரே போற்றிப் புகழ்ந்து திவ்வியப் பிரபந்தங்களுள்

ஒன்றாகச் சேர்ப்பித்து, பின் வருவோர் பயிலும் படியாகச் செய்தார் என்பர். நம்மாழ்வார், மதுரகவி, நாதமுனி, யமுனைத்துறைவர், இராமானுசர் என்று தொடர்பாக வந்த குரு பரம்பரையை இந்நூல் விளக்குவதும் இதன் தனிச் சிறப்பாகும்.

திருக்குருகை பிரான் பிள்ளான்

இராமானுசரின் நியமனப்படி திருவாய்மொழி வியாக்கியானம் ஆறாயிரப் படியைச் செய்தவர் திருக்குருகைப் பிரான் பிள்ளான். வைணவ மரபில் முதன் முதலாக எழுதப்பட்ட உரைநடை நூல் இதுவே. மணிப்பிரவாள நடையில் அமைந்த இந்நூலே முதலில் எழுந்ததும் சுருக்கமானதும் ஆகும். இராமானுசர் கூறிய கருத்துக் களை அடிப்படையாகக் கொண்டே இவர் இந் நூலை உருவாக்கி யுள்ளார்.

ஆசாரியர் ஐவர்

பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்து, தமிழிலும் மணிப்பிர வாளத்திலும், வைணவ பிரபந்த வியாக்கியானங்களும், சம்பிரதாய கிரந்தங்களும், வரலாறுகளும் எழுதிய சில ஆசாரியர்களுள் குறிப் பிடத்தக்கவர்கள் ஐவர். அவர்கள் பட்டரால் ஆட்கொள்ளப்பட்ட நஞ்சீயர், அவருடைய மாணாக்கர் நம்பிள்ளை, அவரிடம் மாணாக் கராயிருந்த பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, பின்பழகிய ஜீயர் ஆகியோராவர்.

நஞ்சீயர்

மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்தில் (1178–1218) வாழ்ந்த பட்டரின் சீடரான நஞ்சீயர் பல நூல்களை இயற்றியுள்ளார். திருவாய்மொழி ஒன்பதினாயிரப்படி, திருப்பாவை ஈராயிரப்படி, திருவந்தாதி, கண்ணிநுண்சிறுத்தாம்பு, திருப்பல்லாண்டு வியாக்கியானம், ரகஸ்யத்ரய விவரணம், நூற்றெட்டு சரணாகதி, கத்யத்ரய வியாக்கியானம் என்பன இவருடைய நூல்களாகும்.

நம்பிள்ளை

நஞ்சீயரின் சீடரான நம்பிள்ளை திருவாய் மொழியை உப தேசிப்பதையே பெரும் பணியாகக் கொண்டவர். இவருடைய வியாக் கியானங்களையே பின்னால் வந்த பெரியவாச்சான் பிள்ளை இருபத்து நாலாயிரப்படியாகவும், வடக்குத் திருவீதிப்பிள்ளை முப்பத்தாறாயிரப் படியாகவும் எழுதித்தந்தனர் என்பர்.

பெரிய வாச்சான் பிள்ளை

திருப்பாவைப் பாசுரங்களுக்கு மிகச் சிறப்பான உரையை அருளியவர் பெரியவாச்சான் பிள்ளை. இவர் செய்த நூல்கள் பல குறிப்பிடத்தக்கன. அவை, நாலாயிரப் பிரபந்தம் முழுமைக்குமான மணிப்பிரவாள வியாக்கியானம், திரிமத சித்தாந்த சார சங்கிரகம், பாசுரப்படி ராமாயணம், கலியன் அருள்பாடு, பரந்த ரகஸ்ய விவரணம், மாணிக்க மாலை, நவரத்னமாலை, சகலப்ரமாண தாத்பர்யம், உபகார ரத்னம், கத்யத்ரய வியாக்யானம், ஆளவந்தார் தோத்திர ரத்நவியாக்யானம், தனிச்லோகி வியாக்யானம், பரந்தபடி, அபயப் ரதான வியாக்யானம், சரம ரஹஸ்யம், அனுசந்தான ரஹஸ்யம், நிகமனப்படி போன்றன.

பின்பழகிய பெருமாள் ஜீயர்

வைணவ ஆசாரியர் வரலாறுகளைக் கூறும் நூல்களுள் முதலாவதாக எண்ணத்தக்கது 'குருபரம்பராப்ரபாவம்' ஆகும். நம்பிள்ளையின் சீடராகிய பின்பழகிய பெருமாள் ஜீயர் அவர்கள் எழுதியுள்ள இந்நூலில், பரமபதத்தில் வைகுந்தநாதன் தொடங்கித் தம் ஆசாரியரான நம்பிள்ளை வரை உள்ள ஆழ்வார், ஆசாரியர்களின் வரலாறுகளைத் தாம் அறிந்த அளவு விளக்கியுள்ளார். இதில், நாதமுனிகள் தொடங்கி ஜீயரின் ஆசாரியரான நம்பிள்ளை வரையிலுள்ள ஆசாரிய பரம்பரை வரலாறுகள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கனவாக உள்ளன.

திருக்கோனேரி தாஸ்யை

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த திருக்கோனேரி தாஸ்யை என்பவர் திருவாய்மொழி வாசகமாலை என்னும் விவரண சதக நூலையும், வார்த்தா மாலை என்னும் சிறந்த உரைநடை எழுதி அருளியுள்ளார்.

வேதாந்த தேசிகர்

வைணவ சமய இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றவர் வேதாந்த தேசிகர் (1268–1369). பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை வாழ்ந்த இவர் வடமொழி, தென்மொழி நூல்கள் பலவற்றையும் எழுதி அருளியவர்.

கருடபஞ்சாசத்து, அயக்கிரீவ தோத்திரம், தேவ நாயக தோத்திரம், அச்சுத தோத்திரம் போன்ற அநேக வடமொழி நூல் களையும், மும்மணிக் கோவை முதலான பல தமிழ்ப் பிரபந்தங் களையும் பாடினார்.

ரகுவீரகத்தியம் என்ற உரைநடை நூலும், கோபால லிம்சதி என்ற கண்ணன் தோத்திரமும், தயாசதகம் என்ற வேங்கடாசலப் பெருமாள் தோத்திரமும் அதிகரண சாராவளி, பாதுகாசகஸ்ரமும் குறிப்பிடத்தக்கன.

சங்கற்ப சூரியோதயம் என்ற நாடகமும், யாதவாய்யுதயம் என்ற காவியமும் இவர் இயற்றியுள்ளார்.

வடமொழியில் தேசிகர் பாடிய சாத்திரங்கள், தோத்திரங்கள் முதலியன 82 என்பர். தமிழில் இவர் பாடிய பிரபந்தங்கள் 24 என்பர். அமிருதரஞ்சனி, அதிகார சங்கிரகம், அம்ருதாஸ்வாதினி, பரமபத சோபனம், பரமதபங்கம், அத்திகிரி மகாத்மியம், அடைக் கலப்பத்து, அர்த்தபஞ்சகம், வைணவ தினசரி, திருச்சின்னமாலை, பன்னிருநாமம், திருமந்திரச்சுருக்கு, துவயச்சுருக்கு, சரம சுலோகக் சுருக்கு, கீதார்த்த சங்கிரகம், மும்மணிக் கோவை, நவரத்தின மாலை, ஆகாரநியமம், பிரபந்தசாரம் போன்றவை இனிய எளிமை யான நடையுடன் கூடியன, இவை அனைத்தும் 'தேசிகர் பிரபந் தங்கள்' என்றே புகழ் பெற்றுள்ளன. இவற்றுள் அடங்கிய பாடல் தொகை 405 ஆகும்.

மொத்தமுள்ள 24 தமிழ்ப் பிரபந்தங்களுள் பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல் என்பனவும், மும்மணிக் கோவையுள் 20 பாடல்களும் இப்பொழுது கிடைப்பதில்லை.

நயினாராசாரியர்

வேதாந்த தேசிகருடைய புதல்வரான நயினாராசாரியர் (1316-1385) தம் தந்தையைப் புகழ்ந்து பாடியுள்ள பிள்ளையந்தாதி ஒரு சிறந்த நூலாகும்.

பிள்ளைலோகாசாரியர்

வடக்குத் திருவீதிப் பிள்ளையின் மூத்த புதல்வரான பிள்ளை லோகாசாரியர் (1264-1369) அவர்கள் அட்டதச ரகசியங்கள் என்னும் 18 சாத்திரங்களை வடமொழியும் தென்மொழியும் கலந்த மணிப்பிரவாள நடையில் மிகவும் அழகாக எழுதியுள்ளார். அவை,

முமுக்ஷிப்படி, தத்துவத்ரயம், அர்த்த பஞ்சகம், ஸ்ரீவன பூஷணம், அர்ச்சராதி, பிரமேய சேகரம், பிரபந்தபரித்தாணம், சாரசங்கிரகம், சம்சார சாம்ராஜ்யம், நவரத்ன மாலை, நவவித சம்பந்தம், யாத்ருச்சிகப்படி, பரந்தபடி, ஸ்ரீயப்பதிப்படி, தத்துவசேகரம், தனித்வயம், தனிச்சரமம், தனிப்ரணவம் என்பன. இவருடைய முக்கியமான நூல்களுக்கு மணவாள மாமுனிகளே வியாக்கியானம் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்

பிள்ளைலோகாசாரியரின் தம்பியான அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் ஆசாரிய ஹிருதயம் என்னும் நூல் மிகவும் சிறப்புடைய ஒரு வைணவ நூலாகும். திருப்பாவை ஆறாயிரப்படி, திருவந்தாதி, அமலனாதி பிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு ஆகிய வற்றிற்கு வியாக்கியானம், மாணிக்கமாலை அருளிச்செயல் ரகசியம் ஆகிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

அழகிய மணவாளப் பெருமாள் ஜீயர்

பெரியவாச்சான்பிள்ளையிடம் சமையல் செய்பவாரக இருந்தவர். வாதிகேசரி-அழகிய மணவாளப் பெருமாள் ஜீயர், பெரியவாச்சான் பிள்ளையிடமே சகல சாத்திரங்களையும் கற்ற இவர் பல நூல்களையும் இயற்றினார். முசலகிசலயம், திருவாய்மொழி பன்னீராயிரப்படி, தத்துவ தீபம், தீபப்பிரகாசிகை, தத்துவ நிரூபணம், தத்துவ சங்கிரகம், தத்துவ பூஷணம், ஞானார்ணவம் போன்ற பல வடமொழி மணிப்பிரவாள நூல்களையும் எழுதி யுள்ளார்.

திருவாய்மொழிப்பிள்ளை

சடகோபதாசர் என வழங்கப்பெறும் திருவாய்மொழிப் பிள்ளை (1300-1405) அவர்கள் பெரியாழ்வார் திருமொழிக்கு ஸ்வாபதேச வியாக்கியானம், ஸ்ரீவசனபூஷண வியாக்கியானம், வ்யாப்தியனு சந்தானம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

மணவாள மாமுனிகள்

பதினைந்தாம் நூற்றாண்டில், தென்கலை வைணவ சம்பிர தாயத்தில் மிகச் சிறந்த ஆசாரியராக விளங்கியவர் மணவாள மாமுனிகள் (1370–1443) அவர்கள். இவர் பிள்ளைலோகாசாரி

யருடைய ரகசிய கிரந்தங்களுக்கெல்லாம் வியாக்கியானம் செய்துள் ளார். ஈட்டுக்குப் பிரமாணத்திரட்டு, கீதைக்குத் தாத்பர்ய தீபம், ஆசாரிய ஹிருதய வியாக்கியானம், உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்திப்பிரபந்தம் போன்ற சிறப் புடைய நூல்களை இயற்றி யருளியுள்ளார்.

இதே போன்று இவருக்குப் பின் வந்தோரும் பலபல நூல் களை இயற்றியுள்ளனர்.

புராணங்கள்

பதினாறாம் நூற்றாண்டில் வைணவ சமயம் சார்ந்த நூல் களான பாகவதமும் தல புராணங்களும் தோன்றியுள்ளன. செவ்வைச் சூடுவார் இயற்றிய இதிகாச பாகவதம் 4973 பாடல்கள் கொண்டதாகும். இதே போன்று வரதராஜ ஐயங்கார் என்னும் நெல்லிநகர் அருளாளதாசர் செய்த புராண பாகவதம் 9147 பாடல்கள் கொண்டதாகும்.

திருக்குருகை மான்மியம், கூடற்புராணம், திருவேங்கடத் தலபுராணம், கோலாசல புராணம் என ஒரு சில தல புராணங்களே இக்கால கட்டத்தில் தோன்றியுள்ளன.

இலக்கிய வளர்ச்சி

இராமானுசருக்குப் பின் வந்தோர் பலர் ஆசாரியர்களாகவும் சிறந்த நூலாசிரியர்களாகவும் விளங்கியதை வரலாற்றுச் செய்தி களால் அறிகின்றோம். இவர்களில் பெரும்பாலோர் நூறு ஆண்டு களுக்கு மேலும் வாழ்ந்தவர்கள். எனவே, ஒரே நூற்றாண்டில் ஆசாரியர்-சீடர் பரம்பரை உருவாவதற்கும் இலக்கியங்கள் வளர்ச்சி பெருகுவதற்கும் நல்லதொரு சூழ்நிலைகள் தோன்றி வளர்ந்தன எனத் தெரிகின்றது. இந்நிலை பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் வளர்ந்து வந்தது குறிப்பிடத்தக்கது. மேலும், அக்காலத்தில் தமிழ கத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலை, சமூக நிலை இவற்றின் காரணமாகவும் வைணவ சமய இலக்கியங்கள் வளர்ச்சி பெற் றுள்ளன.

பொதுவாக, 13ஆம் நூற்றாண்டில் பேரிலக்கியங்கள் எவையும் தோன்றவில்லை. அதற்குக் காரணம் இக்காலத்தில் சோழப் பேரரசர்களுக்கு ஏற்பட்ட வீழ்ச்சியே. பின்னர் வந்த பாண்டியர்களும் அழிந்தனர். கி.பி. 1330 முதல் 1378 வரை ஏற்பட்ட முகம்மதியர்

ஆட்சியால் தமிழராட்சி அடியோடு நிலை குலைந்தது. எனவே, இந்தக் கொந்தளிப்பான நிலையில் இலக்கியங்கள் பல தோன்ற வில்லை.

குலோத்துங்கசோழன்கோவை,சங்கரசோழன்உலா, நளவெண்பா, தஞ்சைவாணன்கோவை எனச் சில சிறு இலக்கியங்களே இக்காலத்தில் தோன்றின.

மக்கட் சமுதாயம் துன்பத்தால் மன அமைதி நாடியது; சமயத்தை நாடியது; சமய இலக்கியங்களை அவாவியது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒழுங்கு படுத்தப்பட்ட வைணவ நெறி இந்நூற்றாண்டில் பல துறையிலும் பெருகிற்று.

ஆசாரியப் பதவியில் நஞ்சீயர் தொடங்கி மிகப் பலர் தோன்றி வியாக்கியானங்களைச் செய்தனர்.

இக்காலத்தில் புத்திலக்கியப் படைபுக்கள் குறைவு. வழக்கிலுள்ள பண்டைய இலக்கியங்களுக்கு உரை இயற்றும் முயற்சியே பெருகியதைக் காண முடிகிறது.

இவ்வாறு 13, 14 ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் சோழப் பேரரசும் பாண்டிய அரசும் அடியோடு நிலை குலைந்து ஒழியவே, ஆங்காங்கிருந்த படைத்தலைவர்கள் சிறு சிறு நிலப் பகுதிகளை வளைத்துக் கொண்டு குறுநில மன்னர்களாக ஆட்சி செய்யத் தலைப் பட்டார்கள். சம்புகுலக் காடவராயர், தென்காசிப் பாண்டியர் என் போர் இவ்வாறு குறுநில மன்னர்கள் ஆனவர்கள். அழிந்த பேராசு எதுவும் பிற்காலத்தில் தலை எடுக்கவே இல்லை. 15ஆம் நூற்றாண்டுக் குப் பிறகு சிற்றரசுகள் பல முளைத்தன. 16ஆம் நூற்றாண்டில் விசய நகர ராயருடைய ஆட்சியும், அவர்கள் பிரதிநிதிகளான நாயக் கருடைய ஆட்சியும், பின்னர் மராத்தியருடைய ஆட்சியும், ஆங் காங்குச் சுமார் இருநூறு ஆண்டுக் காலம் நிலவியிருந்தன.

மேற்கண்ட காலப் பகுதியில் எந்த நிலையான வலிமை பெற்ற அரசும் தமிழ் நாட்டில் ஆட்சி புரியவில்லை. எங்கும் போரும் குழப் பமும் நாசவேலையும் கொந்தளிப்பும் மலிந்திருந்தன. இதன் காரணமாக இக்காலக் கட்டத்தில் சமய நூல்களே அதிகமாக ஏழலாயின. இக்காலத்தில் இத்தகைய நூல்கள் பெருகியது போன்று வேறு எந்தக் காலத்திலும் பெருகவில்லை எனலாம்.

இக்காலத்தில்தான் சாதி பேதங்களை விலக்குகின்ற கதைகள் வைணவ ஆசாரிய மரபில் மிகப்பலவாகத் தோன்றியுள்ளன.

வேதாந்த தேசிகர் உமாபதியாரோடு சம காலத்தவராய் விளங்கினார். பிள்ளைலோகாசாரியர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், என இவர்கள் வைணவ சமயத்தில் ஆதார ஞான சாத்திரம் செய்தார்கள். மணவாள மாமுனிகள் போன்றோர் வைணவ சமய வானில் பெருநட்சத்திரங்களாகப் பிரகாசித்தார்கள். இவர்களுடைய மாணாக்கர் பலர் பலபல நூல்களை இயற்றினார்கள் என்பதையும் அறிகிறோம்.

வரலாற்றுச் சிறப்பு

இவர்கள் இயற்றிய நூல்களுள் கூறப்பெறும் வைணவ ஆசாரியர்களின் சிறப்பான வாழ்க்கை உண்மைகள், குருசீட சம்பிரதாயங்கள், சரணாகதி தத்துவங்கள், நீதிகள், நல் ஆசாரங்கள் முதலியன அக்கால வைணவ சமய வளர்ச்சியை நன்கு புலப்படுத்துகின்றன.

மேலும், ஆசாரியர்களின் விரிவான வரலாற்றை அக்காலத்திலேயே, ஓரளவு ஆதார பூர்வமாக எழுதியது வைணவத்திலுள்ள ஒரு பெருஞ் சிறப்பாகும். இது சைவத்தில் இல்லை.

அறுபத்து மூவர் வரலாறு என்பது வேறு நிலையாக அமைந்தது. ஒரு சைவக் குரு பரம்பரை நூல் தோன்றவில்லை என்பதே உண்மை.

ஆழ்வார்களில் கடைசி ஆழ்வார் நம்மாழ்வார். அவர் பரமதபம் சென்ற அதே நூற்றாண்டில் நாதமுனிகள் தோன்றினார். வைணவ ஆசாரிய வரலாறு நாதமுனிகளோடு தொடங்குகிறது. இவ்விதமாக இவர் நேரே நம்மாழ்வாருடைய தொடர்பு பெறுகிறார். இந்த வகையில் ஆழ்வார் ஆசாரியர் பரம்பரை தொடர்பாக வருகிறது.

சைவ பரம்பரை இத்தகைய தொடர்பு பெறவில்லை. நால்வரோடு நின்று விடுகிறது.

திருமுறை ஆசிரியர் வரலாறு, தனியே நம்பியாண்டார் நம்பியோடும் சேக்கிழாரோடும் நின்று விடுகிறது.

சந்தான ஆசாரியர் வரலாறு, மெய்கண்டாரோடு தொடங்குகிறது இடையில் தொடர்பு இல்லை.

ஆயின், வைணவ ஆசாரிய பரம்பரையினர் தொடர்ந்து வந்து, பேருரைகள் செய்வதிலும், பெரு நூல்கள் படைப்பதிலும்

ஆர்வம் மிக்கவர்களாக இருந்துள்ளனர் என்பது குறிக்கத்தக்கதாகும்.

இவ் வியாக்கியான ஆசிரியர்கள் இரண்டு சிறப்பு நிலைகளைப் பெற்றிருந்தனர். ஒன்று, பகவானுடைய அனைத்து கல்யாண குணங்களிலும் அவற்றை எடுத்துப் பேசுகின்ற ஆழ்வார் பிரபந்தங்களிலும் அளவின்றித் தோய்ந்திருத்தல், இரண்டு, வடமொழியில் அளவில்லாத பயிற்சி. இவையிரண்டுமே இவர்களுடைய நூல்களின் தனிச் சிறப்பாகும்.

வடமொழியின் தேவை

மணிப்பிரவாள நடையைத் தமிழில் முதலில் வழங்கியவர் வைணவரே என்பதற்கு ஆதாரமாக இவர்களுடைய நூல்கள் அமைந்துள்ளன. தமிழில் சிறந்த புலமை பெற்றிருந்த இவர்கள் வடமொழியிலேயே மிகுதியான நூல்களை இயற்றியதற்குக் காரணம் அக்காலச் சூழ்நிலையே எனத் தெரிகின்றது.

அக்காலத்தில் வடமொழியில் நூல் இயற்றுவதுதான் பெருமை என்ற எண்ணத்தினாலேயே இவர்கள் தமிழில் பெருநூல்கள் செய்யாமல் வடமொழியிலேயே செய்தார்கள் என எண்ண வேண்டியுள்ளது.

இவர்கள் அனைவருக்கும் ஆசாரியரான இராமானுசரும் தமிழில் எந்த நூலும் செய்யவில்லை. நாலாயிரத்தைக் கொண்டாடிய இவரும் தம் பாஷ்யங்கள் யாவற்றையும் வடமொழியிலேயே செய்தார். அதிலும் இவர் நாலாயிரப் பிரபந்தத்தைக் குறிப்பிடவில்லை. ஆழ்வார்களுடைய தமிழில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர், தாம் செய்த நூல்களில் தமிழைப் பயன்படுத்த முற்படவில்லை. தமிழைச் சொன்னால், வடமொழி வாணர், முக்கியமாக சங்கர அத்வைதிகள் தம்மை இழித்துப் பேசுவார்கள் என்பதே இவர்தம் கருத்தாக இருந்திருத்தல் வேண்டும்.

வடமொழியில் எழுதினால்தான் பிராமணர் ஒப்புக்கொள்வர் என்பதாலும் சங்கரர் வடமொழியிலேயே எல்லாவற்றையும் செய்தார். அவற்றை மறுத்துச் செய்வதும் வடமொழியாக இருந்தால்தான் ஏற்புடைதாயிருக்கும் என்பதாலும் இவர்கள் வடமொழியிலேயே நூல்களை இயற்றியளித்ததாகத் தெரிகின்றது.

நினைவாற்றலும் நூற் பெருக்கமும்

அக்காலத்தில் வைணவ மரபில், ஆசாரியர் சீடர்களுக்கு

எடுத்துச் சொல்வதை அவர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டு நினைவில் நிறுத்திக் கொண்டமையும், அவற்றை அப்படியே ஏட்டில் எழுதும் பழக்கத்தை மேற்கொண்டமையும் நூல்கள் பல தோன்றுவதற்குப் பெருங்காரணங்களாக அமைந்தமையும் காண்கின்றோம்.

நஞ்சீயர் அருளிய ஒன்பதினாயிரப்படியை ஓலையில் பிரதி செய்வதற்காக எடுத்துச் சென்ற நம்பிள்ளை அவர்கள், அவ் ஓலை களைக் காவிரி வெள்ளத்தில் தவற விட்டபோதும், தம் ஆசாரியர் கூறிய ஒன்பதினாயிரப்படியை நினைவில் கொண்டு புதிதாக ஓலையில் எழுதி வந்து அளித்த வரலாறுகளைக் காண்கிறோம். பின்பும் இவரே பல வியாக்கியானங்களைத் தம் சீடர்களுக்கு அருளியுள்ளார். இவ்வாறு இவர் சொல்லிய மொழிகளை நினைவில் கொண்டே பெரியவாச்சான் பிள்ளை இருபத்து ஆறாயிரப்படியையும் ஏட்டில் எழுதி அளித்ததாகக் கூறப் பெறுகின்றது. இவ்வாறு பல நூல்கள் தோன்றுவதற்கும் இவ்வாசிரியர்களின் நினைவாற்றலே காரணமாக அமைந்ததைக் காணலாம்.

ஏடுகள் மறைவு

இவ்வாறு பல நூல்களை இயற்றுவதற்குக் காரணம் இந்த வைணவர்கள் பல நூல்கள் மறைவதற்கும் காரணமாக அமைந் திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நஞ்சீயர் எழுதிய ஒன்பதினாயிரப்படி ஏடு காவிரியில் அடித்துச் சென்றதால் அந்த மூலநூல்—ஆசிரியர் ஏடு—கிடைக்கவே இல்லை, பின்பு, நம்பிள்ளையின் மாணவரான நடுவில் திருவீதிப்பிள்ளைபட்டர் தம் ஆசாரியர் அனுமதி இல்லாமல் ஆசாரியருடைய வியாக்கியானங் களை ஏட்டில் எழுதியதால் நம்பிள்ளை அவற்றை நீரிலிட்டு அழித்து, கறையானுக்கு இரையாக்கியதை அறிகின்றோம். இதனால் திருவாய் மொழிக்கு அமைந்த இலட்சத்து இருபத்தையாயிரமாகிய கிரந்தம் அழிந்து போயிற்று.

இவ்வாறே நம்பிள்ளையின் மாணவரான வடக்குத் திருவீதிப் பிள்ளையும் தம் ஆசிரியரின் அனுமதியில்லாமல் அவர்தம் வியாக்கி யானங்களை ஓலையில் எழுதியதாகவும், அதனால் கோபமுற்ற நம்பிள்ளை அவற்றை வாங்கி மறைத்து வைத்து விட்டதாகவும் கூறப்பெறுகின்றது. பின்பு, முன்புபோல் இந்நூலும் மறைந்து விடப் போகிறதே என்ற அச்சத்தினால், ஈயுண்ணி மாதவப் பெருமாள் என்பவர் பெரிய பெருமாளை வேண்டி, இந்நூலை வெளிக் கொணர்ந்

தார் என்பர். அதுவே முப்பத்து ஆறாயிரப்படியாக இன்று கிடைக்கின்றது.

இராமானுச நூற்றந்தாதியை எழுதிய திருவரங்கத்தமுதனார் என்பார் இராமானுசர் மீது பாடிய பிரபந்தங்கள் எல்லாம் இன்று கிடைக்கவில்லை. அக்காலத்தில் அவற்றைக் கண்ணுற்ற இராமானுசர் அவை தம் உளப்பான்மைக்கு மாறுபட்டிருந்தமையாலே அவற்றைக் கிழித்தெறிந்தார் என அறிகின்றோம். எனவே, அக்காலத்தில் குருவின் கட்டளைப்படி அல்லாது தாமே எவரும் நூல் செய்தல் என்பது இயலாததாயிற்று. இவ்வகையில் பல நூல்கள் அழிந்தன என்பதும் இவண் நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

புராண இலக்கியங்கள்

தமிழகத்தில் கி.பி. 12 மற்றும் 16 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் இருந்த வைணவப் பெரியோர் சிறந்த தமிழ்ப் புலமை பெற்றிருந்தனர். ஆயினும், சாத்திர வியாக்கியானம், மணிப்பிரவாள உரைநடை நூல் மட்டுமே இயற்றினார். இலக்கிய நூல்களை அவர்கள் பெரிதும் உருவாக்கவில்லை. வேதாந்த தேசிகரும், மணவாள மாமுனிகளும் மட்டுமே சில சிறு தோத்திர நூல்களைச் செய்தனர். மற்றவர்கள் எதுவும் குறிப்பாகச் செய்ய வில்லை என்றே கூற வேண்டும். ஆயின், 16-ஆம் நூற்றாண்டில் இந் நிலை பெரிதும் மாறியதைக் காண முடிகின்றது.

அந் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலகட்டத்தில் தமிழகத்தில் சைவ சமயம் எழுச்சி பெற்றதன் விளைவாக அச்சமயம் சார்ந்த இலக்கிய நூல்களும் பல்கிப் பெருகி வளர்ந்தன. கந்த புராணம், திருவாதவூரடிகள் புராணம், திருப்புகழ் என மக்கள் பெரிதும் வரவேற்று மகிழ்ந்த சைவ இலக்கியங்களைக் கண்ட வைணவ சமயத்தாருக்கும் ஒரு புது எழுச்சியும் முயற்சியும் இக்கால கட்டத்தில் தோன்றியது என்றே கூற வேண்டும். இதன் காரணமாக இவர்கள் பாகவதமும் தலபுராணங்களும் பாடத் தொடங்கினார்கள். இவ்வகையில் இந்த நூற்றாண்டில் இரண்டு பாகவதங்கள் தோன்றியுள்ளன. இவை தவிர பிற நூல்கள் யாவும் தலபுராணங்களாகவே அமைந்துள்ளன.

தல புரணங்கள்

பொதுவாக வைணவத்தில் தலபுராணங்கள் மிகக் குறைவு.

திருமால் தலங்கள் குறைவாகையால் அவற்றிற்குரிய புராணங்களும் குறைவே.

இராமானுசருக்குப் பின் வந்த வைணவர்கள் தங்கள் கூட்டத்தைப் பெருக்குவதிலும், கோயில்களை அமைப்பதிலும், திருமால் வழிபாட்டை நெறிப்படுத்துவதிலும், சாத்திரப் பொருள்களை விளக்குவதிலும் மிகுதியான கவனம் செலுத்தி வந்தார்கள். இவர்கள் நாலாயிரத்தின் பெருமையையும் வியாக்கியானங்களின் பெருமையையும் பெரிதாகப் பேணி வந்தார்களே தவிர, தலங்களின் பெருமையைச் சிறப்பித்துக் கூற முற்பட்டார்களில்லை. இத்தகைய காரணங்களாலும் வைணவத்தில் மிகுதியான புராணங்கள் தோன்றவில்லை.

மேலும், அக்காலத்தில் ஆதிசங்கரரின் அத்வைத நெறியைப் பின்பற்றிய சுமார்த்த பிராமணர்கள் சங்கர பாஷ்யங்களையே பற்றிக் கொண்டு, கோயில் வழிபாட்டு நெறியினின்று விலகி நின்றனர். இவர்களுக்கு மாறான நெறியைப் பின்பற்றிய வைணவ பிராமணர்களும் தங்கள் வடமொழி நூல்களையே பற்றிக் கொண்டு, நாலாயிர திவ்யப் பிரபந்தம் தவிர வேறு தமிழ் நூல் தொடர்பே இல்லாமல் இருந்ததுடன் கோயில் வழிபாட்டு நெறியையும் பெரிது படுத்தவில்லை. இதனால் இவ்விரு நெறியாரும் தல புராணங்களைப் பாடவில்லை. ஆயின், அக்காலத்தில் வாழ்ந்த பிராமணர் அல்லாத சைவர்கள் பெரிதும் கோயில் வழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர்களாக இருந்ததனால் அவர்கள் வழி பல தல புராணங்கள் தோன்றின. எனவே, திருமால் பதிகள் குறைவு என்பதாலும், பிராமணர் அல்லாது வைணவர் குறைவு என்பதாலும் வைணவத்தில் தல புராணம் அருமையாகத் தோன்றிற்று என்பர். இவ்வகையில், இந்நூற்றாண்டுகளில் சுமார் நான்கு வைணவத் தல புராணங்களே தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுநிலையில், இடைக்காலத் தமிழக வரலாற்றில் வைணவ இலக்கியம் என்பது முதலில் மணிப்பிரவாளமும் வடமொழியும் ஆகிய மொழி நடையில் அமைந்த உரைநூல்களாகவும், பின்பு தனி நூல்களாகவும் பெருகியுள்ளன. சைவ சமயம் நன்கு வளர்ச்சி பெற்ற நிலையில், அதற்கு மாறாக வைணவ சமயம் வளர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கில் பல நூல்கள் எழுந்துள்ளன. பதின்மூன்றாம் நூற்றாண்டு முதலாகப் பல வியாக்கியான நூல்கள் தோன்றியுள்ளன. பதின்நான்கு, பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வடநாட்டில்

தோன்றிய இராமானந்தர், வங்கக்கவி சண்டிதாசு, மீராபாய் (1403-70), நரசிம்ம மேதா (1419-81), கபீர்தாசர் (1440-1548), வல்லபாசாரியர் (1473-1531), சூர்தாசர், கிருஷ்ண சைதன்ய மகாப் பிரபு (1486-1536) போன்றோரால் வைணவ சமய இலக்கியங்கள் பல தோன்றியதைப் போலவே தமிழகத்திலும் வைணவ ஆசாரியர்கள் பலர் தோன்றி, பல ஆண்டுகள் வாழ்ந்து, பல நூல்கள் பெருக வழி செய்து இலக்கிய வளம் கண்டனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இவ்வாறு இடைக்காலத் தமிழக வரலாற்றில் தோன்றிய வைணவ சமயம் தொடர்பான மணிப்பிரவாள நூல்களையும் உரை நடை நூல்களையும், இலக்கியங்களையும் தனிப்பாடல்களையும் ஒரு சேரத் தொகுத்து ஆராய்வது தமிழ் மொழி வளர்ச்சிக்கும், வைணவ சமய வளர்ச்சிக்கும் பெரிதும் துணை புரிவதாகும்.

சீக்கியர்களின் பெயர் சூட்டும் சடங்குகள்

அ. நடராசன்

1. முன்னுரை

குழந்தை பிறந்தபின் பெயர் சூட்டுவது என்பது மரபாகும். பஞ்சாப்பில் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுவதை ஒரு சடங்கு முறையாகக் கொண்டாடும் பழக்கம் காணப்படுகிறது. குழந்தையில் ஆண் குழந்தை, பெண் குழந்தை எனப் பிரித்துப் பார்த்தலாகாது என்பது சீக்கியக் குருமார்களின் போதனையாகும். எனினும் ஆண் குழந்தை பிறந்தால், அக்குழந்தைக்குப் பெயர் சூட்டும் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். பெயர் சூட்டும் சடங்கு முறையில் சீக்கியர்கள் என்னென்ன பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ளனர் என்பதை இக்கட்டுரை சுருக்கமாக விளக்க முனைகிறது. இக் கட்டுரையில் கரு உருவானது முதற்கொண்டு குழந்தை பிறந்தபின், அக்குழந்தைக்குப் பெயரிடும் வரை செய்யப்படும் சடங்கு முறைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

2. குழந்தையின் பிறப்பும் சடங்கு முறைகளும்

மகப்பேற்றுக்குப் பெண்கள் தாய் வீடு செல்லும் பழக்கம் காணப்படுகிறது. ஆனாலும் இதற்கெனத் தாய்வீடு செல்லக் குறிப்பிட்ட மாதம்தான் என்பது இல்லை. அவர்களின் வசதிக்கேற்ப இது ஏற்படும். முதல் மகப்பேறு பெண்ணின் தாய் வீட்டில்தான் பெரும்பாலும் ஏற்படுவதைக் காணமுடிகிறது. சில கூட்டுக் குடும்பங்களில் குழந்தை கணவன் வீட்டில் பிறத்தலுமுண்டு. குடும்பங்களில் பொருளாதார, மருத்துவ வசதியை ஒட்டி இந்த முறைகளில் மாற்றம் ஏற்படுதலும் உண்டு.

2. 1. பிறப்பிற்கு முந்தைய சடங்குகள்

கரு உருவாகியுள்ளது என்பதை நன்கு அறிந்து கொண்டபின் அப்பெண் எங்கும் தனியே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. அப்பெண்ணின் மாமியார் அவளை உள்ளூரில் உள்ள முனிவரிடமோ பூசாரியிடமோ அழைத்துச் சென்று ஆசீர்வதிக்கச் செய்வாள். அப்

பெண்ணிடம் சிறிய காகிதத்தைக் கொடுத்துப் புனித வார்த்தை களை உச்சரித்துக் கொண்டே எழுதச் சொல்லப்படும் பிறருடைய கண்ணேறு பட்டுவிடக்கூடாது என்பதில் கவனம் செலுத்தப்படும். குறிப்பாகக் குழந்தை இல்லாத பெண்களின் ஏக்கப் பார்வை தீங் கானது எனக் கருதுகின்றனர். மேலும் பல குழந்தைகள் பிறந்தும் குழந்தைகளைப் பறிகொடுத்த பெண்களின் நிழல்கூட இப்பெண்ணின் மேல் பட்டுவிடக்கூடாது என்பதில் கவனம் செலுத்துகின்றனர். இது மக்களின் பொதுவான மனநிலை என்றே கருதமுடிகிறது. அப்பெண் ணின் கையில் இரும்பு வளையமும் படுக்கையில் இரும்புப்பூட்டும், படுக்கைக்குக்கீழ் தூய்மையான தண்ணீரும் அவசியம் என்று கருது கின்றனர். கெட்ட ஆவிகளிடமிருந்து இரும்பும் சுத்தமான தண்ணீரும் காக்கின்றன என்பது அவர்களின் நம்பிக்கையாக இருக்கிறது. ஏழு பழங்களைக் கொடுக்கும் மரங்களின் இலைகளையும் கூட வைத் திருப்பர்.

ஒரு மாதம் கடந்தபின் மருத்துவச்சி (நாவிதன் மனைவி) தன்னுடன் இரண்டு பெண்கள் உதவிக்கு அமைத்துக்கொண்டு வந்து அப்பெண்ணுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்வாள். இதற்கு பீக் (Peke) என்பது பெயர், அப்பெண்ணின் மாமியார் மருத்துவச் சியிடம் ஒரு தேங்காய், இரண்டு கேக்கு, மற்றும் சிவப்பு நூல் போன்றவற்றைத் தருவாள். இதை காம்னி (khamni) என அழைக் கின்றனர். மாமியார், பேரக்குழந்தையை எதிர் பார்க்கிறாள் என்பது இதன் பொருளாகும். இந்தச் சடங்கு முறையில் அப்பெண்ணின் அம்மாவும் மகிழ்வோடு வந்து கலந்து கொள்வாள். மேலும் அப் பெண்ணின் அப்பா, அண்ணன்கள், அண்ணிகள், அக்கா, தம்பி, தங்கைகள், உறவினர்கள் அனைவரும் கலந்து கொள்வர். உறவி னர்களுடன் சென்று அப்பெண் பீப்பல் (peopal) மரத்திற்கு தண்ணீர் ஊற்றுவாள். ஏழு கிணறுகளில் ஏழு மரங்களின் இலைகளைப் போட்டு, அந்த ஏழு கிணற்றுத் தண்ணீரிலும் அவள் குளிப்பாள். அவ்வூரில் உளள குருதுவாராவிற்கு அருகில் உள்ள புனிதக் குளத்தில் தமக்கு ஆண் குழந்தை வேண்டி அப்பெண் நீராடுவாள். அன்றிலி ருந்து மகப்பேற்றில் குழந்தையை இழந்த பெண்களுடன் பேசுவதை நிறுத்தி விடுவாள். இருட்டு வேளைகளில் வெளியில் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இதுபோன்ற நேரத்தில் தங்கள் உறவி னர்களுக்கு உடல் நலம் வெகுவாகப் பாதிக்கப்பட்டாலும், துக்க நிகழ்ச்சிகள் ஏதேனும் நிகழ்ந்தாலும் அப்பெண்ணின் அம்மாவும் சகோதரிகளும் செல்ல மாட்டார்கள்.

அப்பெண்ணுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் சுத்தமான தண்ணீர், எழுவகைத் தானியங்கள், இரும்புத்துண்டு போன்றவை வைக்கப்பட்டு இருக்கும். தேவையற்ற பிற மனிதர்கள் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. உறவினர்களையும் வேலைக்காரர்களையும் அப்பெண்ணின் அம்மா கண்காணித்துக் கொள்வாள். நாய், பூனை போன்றவைகூட அந்த அறையைத் தாண்டிச் செல்லாதவாறு பார்த்துக் கொள்வர்.

குழந்தை பிறந்தபின் செய்யும் சடங்கு முறைகள்

அப்பெண்ணுக்கு வலி எடுத்தவுடன் தாதியைக் கூட்டி வருவார்கள். தாதியின் உதவியுடன் அப்பெண் குழந்தையைப் பெற்றெடுப்பாள். குழந்தை பிறந்த பின் தாதி மகிழ்வுடன் நாட்டுப் பாடல் பாடுவாள். இதற்கு 'வாத்யன்' (wadhaian) என்பது பெயர். குழந்தை பிறந்த செய்தியைத் தாதி முதலில் அப்பெண்ணின் அம்மா விடம் கூறுவாள். மகிழ்வான செய்தியைக் கூறிய தாதிக்கு அவள் உடையும் ஐந்து ரூபாயும் கொடுப்பது பழக்கமாக இருக்கிறது. இதைப் பெற்றுக்கொண்ட தாதி செய்தியை அப்பெண்ணின் அப்பா விடம் சென்று கூறுவாள். அவர் அவளுக்கு மகிழ்வோடு பதினோரு ரூபாய் கொடுப்பது மரபாக இருக்கிறது.

குழந்தையைப் பெற்றெடுத்த அப்பெண்ணின் கணவன் வீட்டிற்கு நாவிதன் மூலம் குழந்தை பிறந்த செய்தியை அன்றே சொல்லி அனுப்புவர். மகிழ்வான செய்தியைக் கூறிய நாவிதனுக்குக் கணவன் வீட்டில் இனிப்பு, அரிசி, தானியங்கள் போன்றவை அன்பளிப்பாக வழங்கப்படும். ரூபாய் பதினொன்றும் அவனுக்குக் கொடுப்பது பழக்கமாக உள்ளது. குழந்தையின் அப்பா மகிழ்ச்சி யுடன் தன் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் இனிப்பு வழங்குவான். பின் அவன் செய்தி கொண்டு வந்த நாவிதனைத் தன் வயலுக்கு அழைத்துச் சென்று அங்கு அவனுக்கு மது வழங்கித் தானும் அருந்தி மகிழ்வான். மாவு, நெய், தயிர், பழங்கள் ஆகியவற்றுடன் மஞ்சள் நிற உடையும், தங்கத்திலான காது வளையமும் மற்றும் பிற தேவையான பொருட்களையும் ஒரு பாத்திரத்தில் வைத்து நாவி தனிடம் குழந்தை பெற்றவளுக்காக அனுப்பி வைப்பர்.

முதல் பதினொரு நாட்கள் அசுத்தம் காரணமாக அப்பெண் அந்த அறைக்குள்ளேயே தங்கியிருப்பாள். குழந்தையின் பாட்டியும், தாதியும் அவளுக்கும் குழந்தைக்கும் தேவையான வசதி செய்து

கொடுப்பர். அப்பெண்ணின் மூத்த சகோதரி வந்து மகிழ்வோடு குழந்தைக்கு 'குர்தி' (gurhti) தருவாள். இது இனிப்பு கலந்த பாலில் ஒரு சொட்டு ஆகும்.

குழந்தை பிறந்த 11வது நாள் அந்த அறையில் சில சடங்குகள் நடைபெறும். தன்னுடைய கணவன் வீட்டிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட மஞ்சள் நிற ஆடையையும் காது வளையத்தையும் அணிந்து கொண்டு அவளாலேயே பின்னப்பட்ட புல்காரி (phulkari)யை உடம்பில் போர்த்திக் கொண்டு அறைக்கு வெளியில் வருவாள். புல்காரி என்பது பெண்கள் விதவிதமான கலர்களில் தாங்களே பின்னும் ஒருவகைத் திரைச்சீலையைப் போன்ற துணியாகும். இதைப் பயன்படுத்துவதில்கூட அர்த்தங்கள் உண்டு. பிறப்பு, திருமணம், இறப்பு போன்ற சமயங்களில் இந்த நிறமுடைய புல்காரி தான் உபயோகப்படுத்த வேண்டும் என்ற வரையறையுண்டு. பெண்களின் பிறப்பு முதல் இறப்பு வரை அவர்கள் வாழ்க்கையோடு புல்காரிக்கு மிகவும் தொடர்பு உண்டு. பின்பு அந்த அறை பச்சை இலைகளாலும் வெந்நீராலும் கழுவிச் சுத்தம் செய்யப்படும். பின் மாட்டுச் சாணத்தால் அந்த அறை மெழுகப்படும்.

ஆதிகிரந்தம் படிக்கும் சடங்கு 45 நாட்களுக்குப் பிறகு நடைபெறும். அந்தச் சமயத்தில் பெயர் சூட்டும் சடங்கும் சேர்ந்தே நடைபெறுவதுமுண்டு.

3. பெயர் சூட்டுதல் தொடர்பான சடங்குகள்

குழந்தை ஆண் குழந்தையெனில் செய்ய வேண்டிய அத்தனை சடங்கு முறைகளையும் செய்யும் பழக்கம் காணப்படுகிறது. பெண் குழந்தைகளுக்குச் செலவு செய்து ஆடம்பரமாகப் பெயர் சூட்டுவதில்லை.

குழந்தைக்குப் பெயர் குருதுவாராவில் சூட்டப்படுகிறது. குழந்தை பிறந்தவுடன், குழந்தையின் பெற்றோர்கள் குழந்தை பிறந்த சில தினங்களில் குருதுவாராவிற்குச் செல்கின்றனர். குருதுவாராவில் குருவுக்கு நன்றி கூறுகின்றனர். குழந்தையைக் குருவின் அருளால் பெற்றெடுத்தோம் என்ற நம்பிக்கையில் குருவுக்குக் காணிக்கை செலுத்தும் பழக்கம் உண்டு. இந்தக் காணிக்கையின் அளவு ஒன்றேகால் ரூபாய். இது அவர்களின் ஆதிகாலந்தொட்ட மரபு. ஆனால் இன்றைய சமுதாயத்தில் குழந்தை பிறந்த வீட்டின் பொருளாதார நிலையை ஒட்டி இந்தக் காணிக்கைத் தொகை நூறு,

ஆயிரம் என்றுகூட உயர்ந்துள்ளது எனலாம். தங்கள் வீடுகளில் இருந்து 'காரா பிரசாத்' தாங்களே தயார் செய்து குருதுவாராவிற்கு எடுத்துச் செல்வர். ஆதி கிரந்தத்திற்கு ஒரு மீட்டர் அளவுள்ள பருத்தி, பட்டுத் துணியை அவர்களால் முடிந்த விலையில் எடுத்துச் சென்று அணிவித்து வணங்குவர். குருதுவாராவில் இதற்கெனத் தனிப் பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்படுகிறது. குருதுவாராவில் குழந்தைக்கு 'கிரந்தி'யால் 'அமிழ்தம்' வழங்கப்படுகிறது. இந்த அமிழ்தம் தண்ணீரில் இனிப்பு கலந்து தயார் செய்யப்படுகிறது. கிரந்தி ஆதிகிரந்தத்தில் உள்ள முதல் ஐந்து பாடல்களைப் பாடிக்கொண்டே தண்ணீரில் இனிப்புப் போட்டு, அதைச் சிறிய இரண்டு பக்கமும் கூர்மையுள்ள 'கந்தா' வால் கலக்குவர். பிறகு 'கிர்பானி'ன் ஒரு முனையில் அந்தத் தண்ணீரைத் தொட்டுக் குழந்தையின் நாக்கில் வைப்பார். மீதமுள்ள அமிழ்தம் குழந்தையின் தாயால் அருந்தப்படும் என்பது மரபு.

அமிழ்தம் குழந்தைக்குக் கொடுத்தபின் பெயர் சூட்டும் சடங்கு தொடங்குகிறது. இப்போது குரு கிரந்தம் திறக்கப்படும். திறக்கப் படும்பொழுது எந்தப் பக்கம் வருகிறதோ அதில் இடது பக்கத்தில் உள்ள முதல் வரி பெற்றோரால் படிக்கப்படுகிறது. அந்தப் பக்கத்தில் உள்ள உபதேசத்தின் சாராம்சத்தை வைத்துப் பெயர் முடிவு செய்யப்படுகிறது. பெயரைக் கிரந்தியுடன் கலந்து பேசிப் பெற்றோர் கள் முடிவு செய்கிறார்கள். பெயரின் தொடக்கம் 'க'-(ga) என்பதில் இருக்க வேண்டும் என்பதில் மக்கள் மிகவும் அக்கறை காட்டு கின்றனர், காரணம் அது குருவின் முதல் எழுத்தாக இருப்பதால் அதைத் தேர்ந்தெடுக்கப் பெரிதும் விரும்புகின்றனர். இல்லை யெனினும் பெரும்பாலும் குருக்களுடன் தொடர்புடைய பெயர்களாக இருக்க வேண்டும் என்பது அவர்களுடைய பழக்கமாக இருக்கிறது. இது பெயரின் முன் பகுதிக்குத்தான். பெயரின் பின்பகுதி, குழந்தை ஆணாக இருந்தால் '–சிங்' (Singh) என்றும், குழந்தை பெண்ணாக இருந்தால் '-கௌர்' (kaur) என்றும் அமையும். சிங் என்பது சிங்கத்தையும், கௌர் என்பது இளவரசியையும் பொருளாகக் கொண்டுள்ளன. இதன்படிப் பெற்றோரால் பெயர் முடிவு செய்யப் பட்டு, கிரந்தியால் குழந்தைக்குச் சூட்டப்படுகிறது. பெயர் சூட்டும் சமயம் ஆதி கிரந்தத்தின் சில பகுதி கிரந்தியால் படிக்கப்படுகிறது.

4. பிறப்புச் சடங்கில் ஆதிகிரந்தம் பெறுமிடம்

குழந்தை பிறப்பின்பொழுது குழந்தைகளின் எதிர்காலங் கருதி, குருமார்கள் போதித்துள்ள போதனைகள் பாடப்படுகின்றன.

''உயர்ந்த கடவுள் எனக்குத் துணையைக் கொடுத்துள்ளான். வசிப்பிடத்திலுள்ள துயரங்களும்
நோய்களும் அழிக்கப்பட்டன. ஆணும் பெண்ணும்
கடவுளால் திருமணம் செய்கின்றனர். கடவுள்
அவன் கருணையை அவர்களிடம் காட்டுகிறான்.
ஓ..இப்பொழுது எங்கும் அமைதிநிலவுகிறது''

இது குரு அர்ஜுன் தன் மகன் குருகர் கோபிந்து பிறந்த போது பாடியதாகும். இதை 'சபத்' என அழைப்பர். இந்த வரிகள் குழந்தைகளுக்குப் பெயரிடும் சமயம் பாடப்படும் பழக்கம் காணப் படுகிறது.

''உண்மையான குரு குழந்தையைக் கொடுத்துள்ளார்
நீண்ட காலம் வாழும் குழந்தை விதியால் பிறந்தது
தன்னுடைய வசிப்பிடமான தாயின் கருப்பையிலிருந்து அவன்
வந்தவுடன் தாய் மிகவும் மகிழ்வுறுகிறாள்.
குழந்தை இவ்வுலகத்தின் குரு (கோபிந்து) பிறந்துள்ளான்
எதிர்காலம் அனைவருக்கும் மிகவும் தெளிவானது
பத்தாவது மாதம் குழந்தை பிறப்பதற்குக்
கடவுள் கட்டளையிடுகிறான்
வருத்தம் மாறி இன்பம் பிறக்கும் என்பது தெளிவு
சீக்கியர்கள் மகிழ்வோடு 'குர்பானி' பாடுகின்றனர்.''

இதுவும் அர்ஜுன் குருவால் பாடப்பட்டதாகும். குழந்தையின் எதிர் காலம் என்ன என்பதைக் கூறிவிடும் தீர்க்கதரிசனம் குருக்களுக்கு இருந்திருக்கின்றன என்பதை அறியமுடிகிறது.

மேலும் 'அனந்த' என்ற பகுதியில் முதல் ஐந்து பாடல் களும், 'அர்தாஸ்' பாடல்களும் கிரந்தியால் படிக்கப்படுகிறது. இந்தச் சடங்கின் இறுதியாக அனைவருக்கும் 'காரா பிரசாத்' வழங் கப்படும். காராபிரசாத் என்பது குருதுவாராக்களில் வழிபாட்டுக்குப்பின் பக்தர்களுக்கு வழங்கப்படும் ஒருவகை பிரசாதமாகும். பெற்றோர்கள் கேட்டுக் கொண்டால் இந்தப் பெயர் சூட்டும் சடங்குக்காக, கிரந்தி யால் ஆதி கிரந்தம் முழுவதும் படிக்கும் பழக்கமும் உண்டு.

குருதுவாரா இல்லாத இடங்களிலும், காலச் சூழ்நிலை காரணங்களாலும் இத்தகைய சடங்குமுறை சிறப்பாக நடைபெறாமல் போவதும் உண்டு. எனவே குருதுவாரா இல்லாத இடங்களில் வசிக்கும் சீக்கியர்களும், பனி, குளிர், மழை போன்ற காரணங்களால்

குருதுவாரா செல்ல முடியாத சீக்கியர்களும் இந்த விழாவை எளிமையாகத் தங்கள் வீடுகளிலேயே வைத்துக் கொள்கின்றனர். வீட்டில் உள்ள வயதில் மூத்தவர் குழந்தைக்கு அமிழ்து தயார் செய்து கொடுப்பார். சீக்கியர்களின் வீடுகளில் கண்டிப்பாகக் குரு கிரந்தம் இருக்கும். எனவே கிரந்தத்தின் சில பாடல்களை அவர்களே பாடி, குருவினை வணங்கிப் பெயரிடும் பழக்கம் உண்டு.

5. பிற சடங்குகள்

குழந்தைக்குப் பெயரிடும் சடங்கு முடிவுற்றபின் அக்குழந்தையின் உறவினர்கள் செய்யும் பல சடங்கு முறைகள் தொடங்குகின்றன.

குழந்தை, பெண்ணின் கணவன் வீட்டிலேயே பிறந்தால், அப்பெண்ணின் பெற்றோர்கள் சில சீர் வரிசைகளோடு, பெண்ணையும் குழந்தையையும் காண வருகின்றனர். அவர்கள் தங்கள் பெண்ணுக்கும் அவள் குழந்தைக்கும் புத்தாடைகள் கொண்டு வருகின்றனர். பெண்ணின் மாமியாருக்கும் ஆடைகள் கொண்டு வந்து கொடுக்கும் மரபும், பெண்ணின் கணவனுக்கும் மாமனாருக்கும் புதிய தலைப்பாகை கொடுக்கும் மரபும் காணப்படுகிறது. மேலும் அப்பெண்ணின் அம்மா, குழந்தை பெற்ற தன் மகளுடைய உடல்நலம் கருதி நெய், பருப்பு வகைகள், தானியங்கள், பழங்கள் வாங்கி வந்து கொடுக்கும் பழக்கம் காணப்படுகிறது. உறவினர்களுக்கு இனிப்பு வழங்கித் தங்கள் மகிழ்வைத் தெரிவிக்கின்றனர். குழந்தைக்குத் தங்கத்தில் 'கரா' அணிவிக்கப்படும் பழக்கம் உண்டு. வசதியற்ற குடும்பங்களில் வெள்ளி கரா அணிவிக்கப்படுகிறது. மேலும் இச்சடங்குமுறை பெண்ணின் பெற்றோரின் பொருளாதார வசதிக்கேற்ப ஆடம்பரமும் எளிமையும் கலந்து கொண்டாடப்படுகிறது.

குழந்தையின் பிறப்பை ஒட்டி அக்குழந்தைக்கு உறவினர்களிடமிருந்து வரவும் அதிகம் உண்டு. குழந்தைக்கு உறவினர்கள் பணம் வழங்குகின்றனர். ஆடை வழங்குகின்றனர். ஆபரணங்கள் வழங்கப்படும் பழக்கத்தையும் காணமுடிகிறது. இந்தப் பழக்கம் குழந்தையின் ஒரு வயதுவரை தொடர்ந்து நடைபெறும்.

குழந்தையின் அப்பாவும் இந்த வகையான செலவுகளில் இருந்து தப்பமுடிவதில்லை. அவர் தன்னுடைய நண்பர்களுக்குத் தேனீர் விருந்து வழங்குகிறார். தனக்குக் குழந்தை பிறந்த மகிழ்ச்சியைக் கொண்டாடத் தன்னுடைய மாமியார், மாமனாருக்குப் புதிய ஆடைகள் வழங்கும் பழக்கம் காணப்படுகிறது. மேலும் நெருங்கிய

உறவுப் பெண்களுக்குப் புடைவை, சல்வார், கமீசு வழங்குதலும் ஆண்களுக்குத் தலைப்பாகை வழங்குதலும் மரபாக உள்ளமை தெரிகிறது.

ஐந்து முக்கிய பெரியவர்களையோ மதத்தொடர்புள்ள ஐந்து பூசாரிகளையோ அழைத்து வந்து குழந்தையை வாழ்த்தச் சொல்லும் பழக்கம் உண்டு. குழந்தையை வாழ்த்தியபின் குழந்தையின் தந்தை அவர்களுக்கு பணம் முதலியன கொடுக்கும் பழக்கம் உள்ளது. ஏழைகளுக்கு உணவும் வழங்குகின்றனர்.

இவ்விதம் குழந்தை பிறப்பதற்கு முன்பாகவே தொடங்கப்படும் இத்தகைய சடங்கு முறைகள் இறப்புவரை தொடர்ந்து நடைபெறுவதை அறிய முடிகிறது.

6. முடிவுரை

எல்லா மதத்தவர்களிடமும் பிறப்பு முதல் இறப்பு வரை பல வகையான சடங்கு முறைகள் நடைபெறுகின்றன என்பது அனைவரும் அறிந்ததே. இதற்குச் சீக்கியர்களும் விதிவிலக்கானவர்கள் இல்லை. இக்கட்டுரையில் பிறப்புக்கு முன்பும், குழந்தை பிறந்த பின்பும் சீக்கியக் குடும்பங்களில் செய்யப்படும் சடங்கு முறைகள் பற்றிச் சுருக்கமாகக் கூறப்பட்டது. இச்சடங்கு முறைகள் பொதுவாக இந்து மதச் சடங்குகளில் இருந்து மாறுபட்டவைகளாக இருப்பதை அறிய முடிகிறது. ஆனால் சீக்கியர்களின் சடங்கு முறைகளைப் பிறப்பு முதற்கொண்டு இறப்புவரை தமிழக மக்களின் சடங்கு முறைகளோடு ஆழ்ந்து ஒப்பிட்டு ஆராய்ந்தால் பல ஒற்றுமைகளைக் காணமுடியும் என்பது தெளிவு.

இலக்கணங்களில் கலைச்சொல்லாக்கக் கூறுகள்

டாக்டர். சா. கிருட்டிணமூர்த்தி

கலைச்சொல்லாக்கம் (Terminology) என்பது அனைத்துத் துறைகளோடும் தொடர்புடைய ஒன்றாகும். வாழ்வியலாயினும் அறிவியலாயினும் தொழில்நுட்பமாயினும் அத்துறைகளின் செயற் பாடுகளுக்கும், கருத்துப் பரிமாற்றத்திற்கும், புதியனவற்றை வெளிப் படுத்துதற்கும் இக் கலைச்சொல்லாக்கம் இன்றியமையாததாக் கருதப் படுகின்றது. ஒரு மொழியில் உண்டாகும் அறிவியல் முன்னேற்றத் திற்கு அடித்தளமாக அமைவது இக்கலைச்சொல்லாக்கமாகும். இதன் தேவையை உணர்ந்த பிறநாட்டார் சொற்களை உருவாக்குதற்கும் அவற்றைத் தரப்படுத்துதற்கு (Standardization) மாகக் குழுக்களை அமைத்துச் செயல்பட்டு வருகின்றனர். இவற்றினின்றும் நாம் அறியலாகும் கருத்துகள், தமிழின் இன்றைய அறிவியல் வளத்தைத் தெளிவுபடுத்த தேவையானவையாகக் கருதப் படுகின்றன. இக் கருத் துகளுக்கு வலிவூட்டும் வகையில் இலக்கணங்களில் காணப்பெறும் கலைச்சொல்லாக்கக் கூறுகள் அமைந்துள்ளமையும் ஆராயத்தக்க தாகும்.

தமிழில் கலைச்சொற்கள்

மூத்த வரலாறு கொண்ட தமிழ் மொழியில் குறிப்பிடத்தக்க வகையில் கலைச்சொற்கள் பரவிக் காணப்படுகின்றன. தமிழில் கலைச்சொற்கள் இல்லை என்பாரைப் பழித்துக் கூறி நிரம்பிய கலைச்சொற்கள் இருக்கின்றன என்ற உண்மையைப் பாரதிதாசனும் சுட்டிக் காட்டியுள்ளார் (மானுடம் போற்று. ப 289-293). இலக்கிய, பண்பாட்டு வளம் செறிந்த இம் மொழியுள் காணக்கிடக்கும் கலைச் சொற்கள் அனைத்தையும் முதற்கண் தேடித் தொகுக்க வேண்டும். இப் பணி நடைபெற்றால் தமிழில் உள்ள கலைச்சொல் வளத்தை நாம் அறிவதோடு, இச்சொற்களை ஆக்கிக் கொண்டதற்குரிய அடிப் படைக் கோட்பாடுகளையும் நாம் உணர்ந்து கொள்ளவியலும். சான்றிற்குச் சிலவற்றைக் காணலாகும்.

இல்லி : முலைக் காம்பிலுள்ள துவாரங்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டதாக முதல் சான்று தெளிவுபடுத்துகின்றது. மெல்லிய துவாரத்தைக் குறிக்கும் வகையிலும் இச்சொல் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். ''இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை'' என்பது புறநானூறு (164).

புண்மேற்புடை : காயம்பட்ட புண்ணின்மேல் மூடியிருக்கும் சவ்வு போன்ற பகுதியைக் குறிக்கும் வகையில் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. ''புண்மேற் புடையின் புகைந்து'' என்பது சீவகசிந்தாமணி (13)

மகாஅர் மருந்தாளர் : குழந்தை மருத்துவர்; குழந்தைகளுக்கென மருந்து ஆய்ந்து கொடுப்பவரைக் குறிக்கும் சொல். இன்றைய 'மருந்தாளர்' (Pharmacist) என்பதோடு ஒப்பவைத்துக் கருதப்படும் இச்சொல் பெருங்கதையில் இடம்பெற்றுள்ளது. 'மகாஅர் மருந்தாளரின் மறத்தகை அண்ணலெ' (இலாவண காண்டம், அவலந்தீர்த்த படலம், 175).

ஊர்வை : ஊர்ந்து செல்லும் உயிரினங்களைக் (Reptiles) குறிக்க இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. அறிவியலில் 'ஊர்வன' என இப்பொழுது ஆளப்படுகின்றது. 'விலங்கினங் கலைய ஊர்வைகள் மெலிய' (முகியத்தின் புராணம், 33).

நீரி : நீரில் வாழும் உயிரினங்களை இச்சொல் குறிக்கின்றது; இப்பொழுது 'நீர் வாழ்வன' (Aquatic creatures) என்ற சொல்லால் அழைக்கப்பட்டு வருகின்றது. 'நீரியாய் ஊர்வனவாய் நின்றநாள் போதாதோ' (பட்டினத்தார் பாடல்கள், அருட்புலம்பல் 24,2).

அளவி : அளவை உடைய பொருள்கள் இச்சொல்லால் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். ''அளவியை யார்க்கும் அறிவரியோன்'' (திருக்கோவையார் 10) என்பதனுள் அளவி என்பதற்கு இலக்கணக்குறிப்பு கண்ட பேராசிரியர் ''துறவு துறவி என நின்றாற்போல அளவு அளவி என்றாகின்றது'' என்றார். அளவுப்பொருள்கள் அனைத்தையும் சுட்டும் பொதுச்சொல்லாக இதனைப் பயன்கொள்ள ஏற்புடைத்தாகும்.

இவை போன்ற எண்ணற்ற சொற்கள் கலைச்சொற்களாகத்

தமிழில் விளங்குவதைக் காணலாம். இக் கலைச்சொற்களை ஆக்கிக் கொண்டதற்குச் சில வழிமுறைகளை-இலக்கண நெறிகளை முன்னோர் மேற்கொண்டிருக்க வேண்டும் என்ற அடிப்படை உண்மையை மறுத்தற் கியலாது.

இலக்கணக் கூறுகள்

இலக்கண நூல்கள் இவ் வழிமுறைகளை வெளிப்படையாக எடுத்துக் கூறவில்லை எனினும் அவற்றிற்குரிய கூறுகளைக் கண்டறிய வியலும். மொழியின் எழுத்து, சொல், பொருள், தொடர் போன்ற வற்றின் அமைப்புமுறையை இலக்கணம் எடுத்து விளக்குவதாதலால், காலத்தைத் தழுவிச் செல்லும் விதிமுறைகளையும் அது சுட்டிச் சென்றுள்ளது. கலைச்சொல்லாக்கத்தின் அடிப்படைப்பண்பு சொற் களை அமைத்துக் கொள்ளுவதெனலாம். தொல்காப்பியச் சொல்லதி காரத்தின் முதல் இயலான 'கிளவியாக்கம்' என்பது இவ்வடிப்படைப் பண்பைக் கொண்டதாகும். ''நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசி அமைத்தாரை அரிசி ஆக்கினார் என்பவாறு போல'' என்பார் சேனாவரையர். சொற்களைச் சமைத்துக் கொள்வதைத்தான் அவ் வாறு கூறினார் எனலாம்.

ஆக்கம் என்பதற்கு 'அமைத்துக் கோடல்' என்ற பொருளைத் தருவார் நச்சினார்க்கினியர் (சீவகசிந்தாமணி 187). இலக்கணக் கலைச் சொற்கள் அனைத்தும் அமைத்துக் கொள்ளப்பட்டவையே. இக் கலைச்சொற்களை நோக்கினாலே சொல்லாக்கத்தின் அடிப்படை உண்மை வெளிப்படக்கூடும். உயிர், மெய், உயிர்மெய், எச்சம், முற்று, தொடர், பெயரெச்சம், வினைமுற்று, அடுக்குத்தொடர், இடைப்பிறவரல் போன்ற சொற்கள் இதற்குச் சான்றுகளாம்.

சொல்லாக்கம் – பொதுக்கூறுகள்

சொல்லாக்கம் இருநிலையில் நிகழும்.

அ. தனிச்சொல்

ஆ. தொகைச் சொல் (கூட்டுச்சொல்)

இவ்விரு நிலைகளிலும் நிகழும் சொல்லாக்கத்திற்குச் சொற்கூறுகளை (விகுதிகள்) யும், சொல்லமைப்பு முறைகளையும் இலக்கணங்கள் எடுத்துக் கூறுகின்றன.

தனிச்சொல்லாக்கம்

இலக்கணங்களுள் கூறப்படும் விகுதிகள் அனைத்தும் தனிச்

சொல்லாக்க நிலைக்குப் பெரிதும் துணை நிற்பனவாகும். தல், அல், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து ஆகிய தொழிற்பெயர் விகுதிகள் (நன்னூல் 19 காண்டிகை யுரை) தொழிற் கலைச்சொற்களை உருவாக்கும் கூறுகளாக அமையும்.

மை. ஐ, சி, பு. உ, கு, றி, று. அம், நர் ஆகிய பண்புப்பெயர் விகுதிகள் (நன்னூல் 10 காண்டிகையுரை) அறிவியல் திறனை வெளிப்படுத்தும் கலைச் சொற்களை உருவாக்கத் துணை செய்யும்.

இவை போன்று வினைமுதற்பொருளையும், செயப்படுபொருளையும் கருவிப் பொருளையும் உணர்த்தும் இ,ஐ,அம் எனும் விகுதிகளும் தன்மைப் பொருளை உணர்த்தும் 'மை' என்னும் விகுதியும் (நன். 140 காண்டிகையுரை) தேவைக்கேற்ப வேண்டும் வகையில் கலைச்சொற்களை உருவாக்கிக் கொள்ள ஏதுவாக அமையும்.

இவற்றுள் 'மை' எனும் விகுதி தொழிற்பெயரையும். பண்புப் பெயரையும், தன்மைப் பெயரையும் சுட்டுவதாக அமைகின்றது. அதுபோல் 'சி', 'உ' எனும் விகுதிகள் தொழிற் பெயரையும் பண்புப் பெயரையும் உணர்த்துகின்றன. 'அம்' எனும் விகுதி தொழிற்பெயர், பண்புப்பெயர், கருவிப்பொருள் ஆகியவற்றை உணர்த்துவதாக அமைகின்றது. இவையல்லாமல் ஆன், மானம் போன்ற பல விகுதிகள் இன்றைய அறிவியல் தமிழில் சொல்லாக்கத்திற்குத் துணை புரிகின்றன. அவை ஆய்ந்து காணப்பெற வேண்டும். இவற்றின் இலக்கணத் தன்மையை அறிந்து, வேறுபாட்டினை உணர்ந்து சொல்லாக்கத்திற்குப் பயன்படுத்தினால், சொல்லாக்கம் எளிமையும் சிறப்பும் பெறும் சான்றிற்குப் பயன்பாட்டிலுள்ள கலைச்சொற்கள் சிலவற்றைக் காணலாம்.

அம் : Acceleration-முடுக்கம், Amplitude-நெடுக்கம், Centroid-நடுமம், Momentum-உந்தம்

இ : Actuator-முனைப்பி, Aerator-உலர்த்தி, Blower-காற்றூதி, Pigment - நிறமி

பாடு : Adjustment - திறப்பாடு

வை,கை : Compound - சேர்வை, Pull - இழுவை, Contact - தொடுகை, Precession - முந்துகை

மை(பண்புப்பெயர்) : Consistency - திண்மை, Mass-பொருண்மை, texture - நுண்மை

மை(தொழிற் பெயர்) : Permeability - கசிமை

பு	:	Cut off –	துண்டிப்பு
வி	:	Coolant –	குளிர்வி
ஆன்	:	Ramjet –	உதைப்பான்,
			Evener - சமனிடுவான்
மானம்	:	Wear –	தேய்மானம்

மேற்கூறப்பெற்றவை தனிச்சொல் நிலையில் சொல்லாக்கக் கூறுகளாக அமைகின்றன.

தொகைச் சொல்லாக்கம்

தொகைச் சொல் நிலையில் கலைச்சொல்லாக்கம் அமைவதும் சொல்லாக்கத்திற்குத் தேவையான ஒன்றாகும்.

இலக்கணங்களுள் கூறப்படும் பண்புத்தொகை. இருபெயரொட்டுப் பண்புத்தொகை, வேற்றுமைத் தொகைகள், வினைத்தொகை, உருவகம் போன்றவற்றின் தொகைக் கோட்பாடுகள் சொல்லாக்கத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளன. மொழிப் பயன்பாட்டில் தொகைச் சொல்லின் பணி அளவிடற்கரியதாகும். உலகப் பொருள்களைப் பெயர்ப் படுத்துதற்கும், விளக்கப்படுத்துதற்கும் தொகைச் சொற்கள் உருவாக்கப்பட்ட நிலையை, இலக்கணவழியும் நாம் அறிந்து கொள்ளவியலும். அறிவியல் தொழில்நுட்ப உலகில் இன்று நிலவும் தொகைச் சொற்கள் எல்லாம் மேற்கூறப்பட்ட தொகைச் சொல்லிலக்கணத்தின்பாற் பட்டனவாகக் காணப்படும். மேலும், இன்றைய கலைச்சொல்லாக்கம் தொகைச் சொற்களைக் கொண்டு உருவாக்கப்படுதல் எளிமை வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது

Design—வடிவமைப்பு, Slide—காட்சிவில்லை, Adaptometer—இசைவுமானி, Television—தொலைக்காட்சி, Telephone—தொலைபேசி, Knowledge—கல்வியறிவு, Helmet—தலைக்கவசம், Computer—கணிப்பொறி, Pesticide—பூச்சிக்கொல்லி போன்ற பல சொற்களை மேற்கூறப்பட்டதற்குச் சான்றுகளாகக் காட்டலாம். கலைச்சொற்களைச் சீர்மை பெற அமைப்பதற்கு இத் தொகைச் சொல்லிலக்கணம் இன்றியமையாததாகும். தொகைச் சொல்லாக ஒரு கலைச்சொல்லை உருவாக்கும் பொழுதே இன்ன தொகைச் சொல் என அறிந்து உருவாக்கினால் அச்சொல்லைச் செம்மையாக அமைக்கவியலும். இதனால் புதிய பொருள்களையும், எண்ணங்

களையும் விளக்கும் வகையில் மொழிவளர்ச்சியடைகின்றது. இத்தகு கலைச்சொல்லாக்கப் பணி மேற்கண்ட தனிச் சொல், தொகைச் சொல் நிலைகளில் நடைபெறுவது.

பெயரிடுமுறை

கலைச்சொல்லாக்க அடிப்படைக் கூறுகளுள் ஒன்று பெயரிடு முறை (Naming process or Nomenclature) யாகும். ஒரு பொருள் பெயர் பெறும் பொழுது அது இடுகுறியாலும், காரணத்தாலும், அவ்விரண்டின் ஆக்கத்தாலும் பெயர் பெறும் என்று இலக்கணம் கூறும் (நன்னூல் 62, 275). இடுகுறி ஆக்கம், காரணம், காரணக் குறி ஆக்கம் ஆகிய மூன்று பெயரிடுமுறைகளையும் கலைச்சொல்லாக்க வகைப்பாட்டிற்குரிய இலக்கணக் கூறுகளாகக் கருதலாம்.

ஒரு நூல் ஐந்து வகையால் பெயர்பெறும் என்று இறையனார் களவியல் உரை கூறுகின்றது. ''செய்தானாற் பெயர் பெறுதலும், செய்வித்தானாற் பெயர் பெறுதலும், இடுகுறியாற் பெயர் பெறுதலும், அளவினாற் பெயர் பெறுதலும், சிறப்பினாற் பெயர் பெறுதலும்'' என்பது அவ்வுரை (நூற்பா 1). இவ் ஐவகை நெறிகளும் பெயரிடு முறையின் பொதுப்பண்பிற்கு ஏற்றனவாக அமையும். ஒரு புதிய அறிவியல் பொருளோ கருத்துருவோ கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கு இடப்படும் பெயர் இந்நெறிகளுள் ஏதேனும் ஒன்றில் அடங்கு வதாகலாம்.

இதுகாறும் கூறப்பட்டவற்றினின்று இலக்கணங்களிலும் இலக்கியங்களிலும் காணப்படும் சொல்லாக்கக் கூறுகள் இன்றைய கலைச்சொல்லாக்கப் பணிக்குத் துணைபுரிவனவாக அமையும் என்று கருதலாம்.

தமிழெழுத்துக்களினது வடிவம்

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

தமிழெழுத்துக்கள் ஒலியெழுத்து வரியெழுத்து என இருவகைப் படும். ஒலிவடிவாகிய எழுத்தை வரிவடிவா லெழுதுவர்.

வட்டம், சதுரம், கோல் என்னும் மூன்றுறுப்பால் வரியெழுத்துக்கள் அமைத்தெழுதப்படும். அகரம், வட்டம் சதுரம் கோல் என்னும் மூன்றுறுப்பால் அமைந்தமை காண்க. சுழித்தது வட்டம்; இழுத்தது கோல்; மறித்தது சதுரமாம்.

இவ்வாறமைந்த வரியெழுத்து, சாதாரணமாக வட்டெழுத் தென்றும் நெட்டெழுத்தென்றும் இருவகைப்படும்.

வட்டெழுத்து, ஓலை கிழிகல் தாமிர முதலியவற்றில் விளக்கமுற வியக்தாக்ஷரமாக வரையப்படுவது. அது நூலுக்கும், விசேஷசாச னங்களுக்கு முதவுவது.

நெட்டெழுத்து, ஓலையிலே சாதாரண வியவகாரங்களை எழுது தற்கு வழங்கும் தொடையெழுத்து.

வட்டெழுத்து, பாடசாலைச்சிறுவராலும் வாசிக்கத்தகும். நெட் டெழுத்து பயின்ருர்க்கன்றி வாசித்தலரிது.

முதலிலே பயில்வது வட்டெழுத்து. வியவகாரதசையிற்பயில்வது நெட்டெழுத்து. அது கணக்கர், கர்ணிகர், சம்பிரதிகளாற் பெரும் பாலும் வழங்கப்படும். தற்காலம் தமிழிலேவழங்கும் அச்செழுத்தெல் லாம் வட்டெழுத்துக்களே.

அவ் வச்செழுத்துக்களை உண்டாக்கினேர் சென்னை புதுவையி லிருந்த பிரபலவித்துவான்களும் கர்ணிகர்களும் சிற்பநுட்பத்தில் வல்ல கம்மியருமேயாவர். அவரெல்லாங்கூடி அக்காலத்தில்வழங்கிய கரலிகிதவட்டெழுத்துக்களையும் சிலாசாசனம் தாமிரசாசனங்களையுங் கண்ணுற் ருராய்ந்து தெளிந்து அச்செழுத்துவடிவங்களைத் துணிந் தார்கள். அவர்களே பூர்வகரலிகிதவட்டெழுத்தையும் தாம் புதிதாக அமைத்த அச்சுவட்டெழுத்தையும் ஒப்புநோக்கி இரண்டுக்கும் இயைபுகண்டவர்கள். பூர்வகலிகிதவட்டெழுத்தை இப்போது காண்பது

எளிதன்று; தாமிரசாசனம் சிலாசாசனங்களையும் மிகப் பழையஏடுகளை யுந்தேடி அவற்றிலே காண்டல்வேண்டும். கரலிகித நெட்டெழுத்துக் காண்பது எளிது. தமிழ்நாட்டிலே சாசனமெழுதுவோர் நெட்டெழுத் துள்பட இன்னுன்கைச்சாத்து என்றெழுதுவது இன்னும் பயின்று வரும் வழக்காறேயாம்.

வட்டெழுத்துக் கிரமமாக நெடுங்காலமெழுதிக் கைபழகியபின் னர்க் கரவேகம் வந்தமையும். அக்கரவேகமும் சிலகாலப்பயிற்சியில் நிலைபெறும். அப்போது கரவேகம் வட்டெழுத்துக்களைத் தொடை யெழுத்தாகவெழுதுமாறு அலகைக்கொண்டுய்க்கும்.

அங்ஙனம் எழுதும்போது வட்டெழுத்துக்களின் வடிவத்தை வழுவவிடாது காத்தே கர மெழுதிப்போகும். கருமநெருக்கம்பற்றி அதிதுரிதமாகவெழுதுவோரே வட்டெழுத்துவடிவை வழுவவிடுத்து வரைந்துசெல்வர். அப்படி யெழுதப்படுவது எழுத்தெனப்படாது. அஃது எழுதுவோர்க்கே பின்னர்ப் புலனுகாபோகினும் போம். அது நிற்க.

வட்டெழுத்துக்களுள்ளே சிலவெழுத்துக்களின் கோலுறுப்புக் களைவரையும்போது எழுத்தலகுதான் போனவழியே மீண்டு சென்று முடிப்பதும் மீண்டு விலங்கிச்சென்றுமுடிப்பதும் மீண்டு அழுத்தி முடிப்பதுமாகப் பலவழிப்பட்டுச் செல்லும். அலகு அகரத்தை எழுதும்போது சுழிமூலத்தேதொடங்கி யழுத்திச்சுழித்து மேற் சென்று சுற்றி வலப்பக்கமாகவழுத்தியிறங்கி இடப்பக்கமோடி வலப்பக்கமாக மீண்டு சந்தியிட்டுச் சிறிதுசென்று திரும்பி மேற் சென்று அவ் வழியே மீண்டழுத்திக் கீழேயிறங்கி முடிக்கும். பகர அகரத்தை இடப்பக்கத்துக் கோற்காற்றலையிலே தொடங்கி அழுத்தியிறங்கி வலப்பக்கநோக்கிச்சென்று மடங்கி மேனேக்கிச்சென்று இடக்காலு யரத்துக்குச்சமமானவுடன் மீண்டழுத்தி முடிக்கும். பகர அகரத்து வலக்காலை மேலேகொண்டுபோய் அவ்வளவில் முடிக்காது மீண்டழுத்திமுடித்த லென்னையெனில், மேலேகொண்டுபோன வளவில் முடிக்கப்பழகின், பின்னருண்டாகும் கரவேகத்தால் அலகு அளவுகடந்துவீசும். வீசுமாயின், பகரத்துவலக்கால் மேலேசென்று மகரமோவென்றுமயங்குதற்கு எதுவாகும். அதுவுமன்றித் தொடை யெழுத்தாக வெழுதவருங்காலத்துப் பகரத்து வலக்காலடியிலிருந் தன்றி முடியிலிருந்துதொடுத்த லமையாதென்க. அதுபற்றியே பகர வகர யகரங்களின் வலக்கால் மீண்டழுத்தி முடிக்கப்படுவனவாம். அதுபற்றியே அக்கால் மெல்லியரேகையாகாது கனத்திருப்பதாம்.

பத்தின்குறியாகிய யவ்வுக்கும் யகரத்துக்குமுள்ள வரிவடிவவேற்றுமையைநோக்குவார்க்கு இந்நியாயம் எளிதிற்புலனும்.

இவ்வுண்மையறியாத சிலர் பகரயகர வகரங்களின் வடிவம் பிழைத்ததென்றெண்ணித் திருத்தப்புகுவர். பகர யகர வகரங்கள் வலக்கால்மெலிந்திருத்தல் வேண்டுமென்பது அவர்கருத்து. ப ய வக்களை பா யா வா க்களாகத் தொடுத்தெழுதுமிடத்து அவ்வலக் காலடியிலன்றி முடியிற்றொடுத்த லமையாது. முடியிற்றொடுக்கில், பி யி வி யென மயங்கவிடமுண்டாம். ஆதலால் முடியிற்றொடுக்க லாகாதென்பதை வலியுறுத்துமாறே ப ய வ க்களை யெழுதும்போது அவற்றின் வலக்காலை முடித்து மறித்தும் அவ்வழியேயழுத்தி யிறங்கி முடித்தல்வேண்டுமென்பது குறித்தற்கு அவ்வலக்காலைக் கனத்த ரேகையாக்கினர். அக்குறிப்புணராது திருத்தப்புகுதல் விவேகமாகாது. ஆங்கில எழுத்துக்களுள்ளே 0 வினுடையவடிவத்தைநோக்குவாராயின் அதுவும் வழுவிற்றென்பர். L உடைய வடிவைநோக்குவாராயின் அதுவும் வழுவிற்றென்பர். 6 உடையவடிவத்தை நோக்குவாராயின் அதுவும் வழுவிற்றென்பர். ஆங்கிலவெழுத்தின் பயிற்சிகொண்டு தமிழெழுத்தைப் பிழையென மதிக்கும் நாகரிகர் ஆங்கில வெழுத் தமைதியை முற்றநோக்காது தமிழெழுத்திற் பிழை கற்பிக்கப்புகுவது தகாது என மீட்டுங்கூறுகின்றேன். தமிழில், தொடையெழுத்துக் கரலிகிதத்தில் வழங்குகின்றதன்றி அச்சில் வழங்கவில்லை. அச்செழுத்து அமைக்கமுயல்வது அத்தியாவசியகம். அதனைத் தமிழ்ச்சங்கத்தாரே முயன்று முடித்தல்வேண்டும்.

(இக்கட்டுரை தொகுதி 12, பகுதி 6, 1914 (ஏப்ரல்–மே) இதழில் வெளிவந்தது)

பழமொழிகள் புலப்படுத்தும் சமுதாய மதிப்புகள்

டாக்டர். தா. ஈசுவரபிள்ளை,

சமுதாயத்தில் வாழ்கின்ற உறுப்பினர்களால் சமுதாயத்திலிருந்து கற்கப்பெறுவனவும், பகிர்ந்துகொள்ளப் பெறுவனவும் ஆகிய அனைத்தும் பண்பாடு எனப்படும். அதாவது சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில் மனிதர்களால் மேற்கொள்ளப்பெறும் அறிவுரைகள், நம்பிக்கைகள், கலைகள், ஒழுக்கங்கள், வழக்கங்கள் என்பனவற்றின் கலவையே பண்பாடு ஆகும். பண்பாடு சமுதாயத்தில் காணப்பெறும் நியமங்களையும், மதிப்புக்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த முறையாக உள்ளது. சமூகவியலாளர்கள் எந்த ஒரு பண்பாட்டையும் மதிப்புகளின் மூலமே விளக்கிக் காட்டமுடியும் எனக் கருதுகின்றனர். எனவே, பண்பாட்டின் அடிப்படையான கூறுகளுள் ஒன்றாக மதிப்புகளும் விளங்குகின்றன. மக்கள் சமுதாயத்தில் வாழ்கின்றபோது, அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் மூலம் வெளிப்பட்டனவே பழமொழிகள் ஆகும். இப்பழமொழிகள் சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் வாழ்வாங்கு வாழ எவை எவை ஏற்றவை, எவை எவை தகாதவை எனச் சமூக மதிப்புகள் பலவற்றை வெளிப்படுத்தும் போக்கை உணரமுடிகின்றது. பழமொழிகள் புலப்படுத்தும் சமுதாய மதிப்புகளில் சிலவற்றை இவண் சுருக்கமாகக் காணலாம்.

அன்புடைமை

உயிர்களுக்கெல்லாம் இன்றியமையாது வேண்டப் பெறுவது அன்புடைமை ஆகும். அன்புடைமையால் எளிதில் பிறரைக் கவர்ந்துவிடலாம். அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது. அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும், சீ என்கிற வீட்டில் பேயும் நுழையாது என்ற பழமொழிகள் அன்பு கொள்வதால் விளையும் நன்மைகளையும், அன்பின்மையால் வரும் கழிவுகளையும் புலப்படுத்துகின்றன.

கல்வியுடைமை

கசடறக் கல்லார்க்கு இசையுறல் இல்லை, கண்டது கற்கப் பண்டிதன் ஆவான், கற்றோர்க்குச் சென்ற இடமில்லாம் சிறப்பு, கற்கையில் கல்வி கசப்பு, கற்றபின் அதுவே இனிப்பு, கல்வி அழகே

அழகு, அப்பியாச வித்தைக்கு அழிவில்லை, இளையோற் கல்வி எப்போதும் நிற்கும், கல்லாதவரே கண்ணில்லாதவர், அறிவு கல்லார் தமக்கு ஆண்மையும் இல்லை, என்ற பழமொழிகள் கல்வி கற்க வேண்டிய முறை, கற்றவர்களின் பெருமை, கல்வியின் இயல்பு, கற்க வேண்டிய காலம், கல்லாதவரின் இழிநிலை என்பன சுட்டப் பெறுகின்றன. இதன் மூலம் மனிதன் மனிதனாக வாழ, சமுதாயம் சிறக்கக் கல்வியறிவு தேவை என்ற உண்மை உணர்த்தப் பெறுகிறது.

இனியன கூறல்

கடிந்த சொல்லினும் கனிந்த சொல்லே நன்று என்ற பழமொழி யானது. மக்கள் பிறரிடம் அன்பாக, இனிய சொற்களைக் கூறுவதன் மூலம் தாமும் பிறரும் மகிழ்ச்சியுடன் வாழமுடியும் என்ற சமுதாய மதிப்பை வலியுறுத்துகின்றது.

அடக்கமுடைமை

ஒருவர் எவ்வளவு உயர்ந்தவதேனும் எத்தகைய சிறப்பினைப் பெற்றிருந்தாலும் அடக்கமுடையவராக வாழ்தலே சிறப்பைத் தருவதாகும். அவர்தான் கல்வி கேள்விகளில் சிறந்த சான்றோராகச் சமுதாயத்தில் மதிக்கப் பெறுவர். கல்வி கற்றிருந்தும் அடக்கமின்றேல் அவர் கல்லாதவராகவே கருதப்பெறுவர் என்பதை அடக்கம் உடையார் அறிஞர் அடங்காதார் கல்லார் என்ற பழமொழி பறைசாற்று கின்றது.

பிறரை மதித்தல்

சமுதாயத்தில் வாழ்கின்ற பிறரையும் தம்மை ஒத்த மனிதர் களாகக் கருத வேண்டும். அவ்வாறு கருதின், தாமும் பிறரால் மதிக்கப்பெறுவோம் என்ற சமூக மதிப்பை குப்பிடு கொடுத்துக் கும்பிடு வாங்கு என்ற பழமொழி உணர்த்தும்.

அஞ்சாமை

அஞ்ச வேண்டிய கொடிய செயல்களுக்கு அஞ்சி, தம் பெருமை களை நிலை நாட்டும் இடத்தும் உண்மையை எடுத்துக் கூறுமிடத்தும் அஞ்சாதிருத்தலே சான்றோர் செயல். இத்தகைய அஞ்சாமைக் குணத்தை யுடையவரே புகழ்பெறுவர் என்பதற்கு அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான் என்ற பழமொழி சான்றாகின்றது.

புகழுடைமை

மனிதனுக்கு இன்றியமையாது வேண்டப் பெறும் அணிகலன் புகழே ஆகும். அதுவே நிலைத்து நிற்கும் தன்மையுடையது. அப்புகழைப் பெறவே பாடுபடவேண்டும் என்பதைப் பொான் ஆபரணத்தைக் காட்டிலும் புகழ் ஆபரணமே பெரிது என்ற பழமொழி புகல்கின்றது.

பெரியாரைச் சார்ந்தொழுகுதல்

ஒவ்வொரு மனிதனும் அவன் சார்ந்திருக்கிறவர்களின் பண்பைப் பொறுத்தே உயர்வும் தாழ்வும் அடைகின்றான். எனவே, சிற்றினம் சார்தலைத் தவிர்த்துவிட்டுப் பெரியாரைச் சார்ந்தொழுகல் வேண்டும் என்பதை மேருவைச் சார்ந்த காகமும் பொன்னிறம் என்ற பழமொழியால் அறியலாம்.

செய்ந்நன்றியறிதல்

மனிதர்களுக்கு இன்றியமையாது வேண்டப் பெறும் நற்குணங் களுள் ஒன்று செய்ந்நன்றியறிதல் ஆகும். ஒருவர் செய்த நன்றியல்லாதனவற்றை உடனே மறந்து நன்மையான செயல் சிறிதெனினும் அதைப் பெரிதாக மதிக்கவேண்டும். உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்ற பழமொழி இவ்வுண்மையை வலியுறுத்தும்.

ஊக்கம், முயற்சி உடைமை

எறும்பூரக் கல்லும் தேயும், அடிமேல் அடி வைத்தால் அம்மி யும் நகரும். தாமதம் தாழ்வுக்கே, இரண்டு இடத்தில் கால் வைக் காதே, ஊழி பெயரினும் ஊக்கம் கைவிடேல், போன்ற பழமொழிகள் துன்பங்களையும் தோல்விகளையும் கண்டு துவண்டு விடாது அவற்றை ஏற்றுக்கொண்டு, அவற்றை வெல்வதற்கு ஊக்கமுடன் முயற்சி செய்யவேண்டும் என்பதையும், காலத்தால் செய்யாது சோம்பியிருத்தல் கூடாது என்பதையும் அறிவுறுத்துகின்றன.

ஒற்றுமை

தனி மனித வாழ்வும், அவன் சார்ந்துள்ள சமுதாயமும் சமுதாயம் சார்ந்துள்ள நாடும் அனைத்துத் துறைகளிலும் தலை சிறந்து நிற்க வேண்டப்படுவது ஒற்றுமை உணர்வே ஆகும். இக் கருத்தை எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம். ஒருமைப்பாடு இல்லாத குடி ஒருமிக்கக் கெடும் என்ற பழமொழிகள் புகலுகின்றன.

மானம் உடைமை

மானம் அழிந்த பின் மரியாதை என்ன, மானம் பெரிதோ உயிர் பெரிதோ என வரும் பழமொழிகள் மக்களுக்கு உயிரைவிட மேலானது மானம் என்பதையும், மானம் போனபின் உயிர்வாழ்ந்தால் எந்தவித மதிப்பையும் சமுதாயம் அளிக்கப்போவதில்லை என்பதையும் நிலை நாட்டுகின்றன.

காலம் அறிதல்

எந்த ஒரு செயலையும் செய்வதற்கு ஏற்ற காலம் வேண்டும். அவ்வாறு காலத்தை அறிந்து செயல்பட்டால் உலகில் அடைய முடியாதது ஒன்றும் இல்லை. எடுத்துக்கொண்ட செயலால் வெற்றி பெறுதல் மிக எளிதாகும். இச்சிந்தனையைக் காலம் செய்கிறதை ஞாலம் செய்யாது என்ற பழமொழி இயம்புகின்றது.

ஒழுக்கம் உடைமை

ஒழுக்கம் உடைமையே ஒரு மனிதனுக்கு உரிய மதிப்பை அளிப்பது ஆகும். சமுதாயத்தில் பிறப்பு, தொழில்களின் அடிப்படையில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடு காணப்படுகிறது. இது அறியாமையால் உருவாக்கப் பெற்ற வேறுபாடு ஆகும். உண்மையில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பது அவனிடம் காணப் படும் ஒழுக்கத்தின் அடிப்படையில் வருவதாகும். இதனையே ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று, கன்மத்தால் சாதியோ, சென்மத்தால் சாதியோ என்ற பழமொழிகள் விளக்குகின்றன.

உருவு கண்டு எள்ளாமை

ஒருவருடைய புறத்தோற்றத்தை வைத்துக் கொண்டு அவரை உயர்ந்தவன் என்று புகழ்வதோ, தாழ்ந்தவன் என்று இகழ்வதோ கூடாது. மலையைத் துளைக்கச் சிற்றுளி போதாதா, சிறு தீ பெரு நெருப்பு, சிறு துரும்பும் பல் குத்த உதவும், கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா, அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் புழு என்ற பழமொழிகள் உருவத்தில் சிறியவர் என எவரையும் இகழக் கூடாது; அவரால் பெரும் செயல்களைச் செய்ய முடியும்; அதே நேரத்தில் வெளித்தோற்றத்தில் அழகாய் இருப்ப வர்களின் மனம் மாசுடன் திகழும் என்பன போன்ற அரிய செய்தி களைத் தருகின்றன.

பொய்யாமை

வாய்மையே உண்மைப்பொருள். அதற்கு மாறான பொய்ம்

மையை விட்டுவிட வேண்டும். பொய்ம்மையால் பல துன்பங்கள் நமக்கும், பிறருக்கும் ஏற்படும். எனவே, பொய்யாமையை வலியுறுத்த எண்ணியே பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிடையாது என்று அச்சுறுத்தும் பழமொழி தோன்றியுள்ளது எனலாம்.

வெகுளியை விடல்

மனிதனுக்குள்ளேயே இருந்து தீமைகளை விளைவிக்கும் பகைகளில் ஒன்றாகக் கருதப்பெறுவது வெகுளி ஆகும். இக்கோபமாகிய செயல் மனிதனை விலங்காக மாற்றிவிடும். நண்பர்களை விலகிச் செல்லும்படி செய்துவிடும். எனவேதான். கோபம் சண்டாளம், தீராக்கோபம் போராய் முடியும் என்ற பழமொழிகள் வழங்குகின்றன எனலாம்.

அவா அறுத்தல்

மனிதன் தன் நிலைக்கேற்பவும், தகுதிக்கேற்பவும், சூழலுக் கேற்பவும் ஆசை கொள்ளல் வேண்டும். இவற்றை மீறிய ஆசை பேராசை எனப்படும். இதுவும் மனிதனின் உள்ளே இருந்து கெடுக்கும் பெரும் பகை ஆகும். ஆசையை அறுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவே அன்று குடிக்கத் தண்ணீரில்லை; ஆனைமேல் அம்பாரி வேணுமாம், ஆசை வெட்கம் அறியாது என்ற எள்ளல் நிறைந்த பழமொழிகள் வழக்கில் உள்ளன.

இன்னா செய்யாமை

பிறருக்கு ஒருவன் நன்மை செய்ய வேண்டும். அவ்வாறு நன்மை செய்யத் தவறினாலும், தீமை செய்யாமலாவது இருக்க வேண்டும். எனவே ஒருவன் தன் செயலாலும், சொல்லாலும் பிறருக்குத் துன்பம் செய்யாது இருக்க வேண்டும். அவ்வாறு துன்பம் செய்தால் பின்னால் வருந்த நேரிடும். இக்கருத்தினையே அறிந்து செய்கிற பாவத்தை அழுதழுது தொலைக்க வேண்டும், அடாது செய்தவன் படாதுபடுவான், கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழிகள் பகர்கின்றன.

இவ்வாறு சமுதாயத்தில் பெருவாழ்வு வாழ்ந்த சான்றோர்கள் வருங்காலச் சமுதாயம் பாரோர் போற்றும் பண்பு நிறை சமுதாயமாகத் திகழவேண்டும் என்ற பெரு நோக்கத்துடன் தம் அனுபவ உண்மைகளைப் பழமொழிகளாக்கி விட்டுச் சென்றுள்ளனர். அவற்றை வெறும் பழமொழிகளாக மட்டும் கருதாது, நல்வாழ்விற்குரிய புது மொழிகளாகக் கொண்டு வாழ்ந்தால் தனிமனிதனும், அவனை உறுப்பினனாகக் கொண்ட சமுதாயமும் சிறப்படைதல் உறுதியாகும்.

சிறப்பகராதிகளின் வகைகள்

டாக்டர் ஏ. ஆதித்தன்

அகராதிகளை அவற்றில் இடம்பெறும் சொற்களின் அடிப்படையில் பொது அகராதிகள் (general dictionaries) எனவும் சிறப்பு அகராதிகள் (special dictionaries) எனவும் இருவகையாகப் பகுப்பர் அறிஞர். பொது அகராதிகள் ஒரு மொழியின்கண் காணப் பெறும் சொற்களை உள்ளடக்கியிருக்கும். சிறப்பு அகராதிகள் குறிப்பிட்ட துறை, பிரிவு போன்றவற்றிற்கான சொற்களை மட்டுமே உள்ளடக்கியிருக்கும்.

சிறப்பகராதிகளை அவற்றின் உள்ளடக்கத்திற்கேற்ப வகைப் படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இருபதாம் நூற்றாண்டில்தான் சிறப்பகராதிகளின் தோற்றம் பெருகிக் காணப்படுகின்றது. மேலைநாட்டு மொழிகளில் காணப்பெறும் சிறப்பகராதிகளைப் போன்று நம் நாட்டு மொழிகளில் பல்வேறுவகை சிறப் பகராதிகள் ஆக்கப் பெறவில்லை.

சிறப்பகராதிகளை கென்னத் விட்டகெர் என்பார் (Dictionaries. 1966, பக்: 13-7) பதினெட்டு வகைகளாகப் பகுத்துள்ளார். இராம் அதர் சிங் என்பார் (Introduction to Lexicography, 1982, பக்:16) ஐந்து அடிப்படையில் சிறப்பகராதிகளைப் பல்வேறு வகையினவாகப் பகுத்துள்ளார். இப்பாகு பாட்டில் அகராதிகளுக்கிடையே மயக்கம் (overlapping) காணப்படுகின்றது. வ. ஜெயதேவன் என்பார் (தமிழ் அகராதியியல் வளர்ச்சி-வரலாறு, 1985, பக்:93) சிறப் பகராதிகளை வரைவில் சேர்க்கை அகராதிகள், மரபுச் சேர்க்கை அகராதிகள், விதிப்பு அகராதிகள், என்ற மூவகைக்குள் பாகுபாடு செய்து உள்ளடக்கியுள்ளார்.

சிறப்பு அகராதிகள் ஒருமொழி அகராதியாகவோ இருமொழி அகராதியாகவோ அமைதலுண்டு. தமிழில் அமைந்துள்ள—அமையவிருக்கின்ற-சிறப்பகராதிகளின் அடிப்படையில் ஈண்டு அவற்றின் வகைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறப்பகராதிகளை அவை உள்ளடக்கும் சொற்களின் நிலை அடிப்படையிலும், வடிவ அடிப்படையிலும், பொருளடிப்படையிலும், பயனடிப்படையிலும் வகைசெய்தல் இயலும்.

அகராதிச்சொல்லின் நிலை அடிப்படையில் சிறப்பகராதிகளை வட்டார வழக்குச் சொற்களைத் தொகுத்துத் தரும் வட்டார வழக்குச்சொல் அகராதி எனவும், ஆட்சியியல், பொறியியல், தாவரவியல், விலங்கியல், சட்டவியல் போன்ற துறைகளுக்குரிய கலைச் சொற்களுக்கு விளக்கம் தரும் கலைச்சொல் அகராதி எனவும். விவசாயம், மீன் பிடித்தல், தச்சு வேலை போன்ற பல்வகையான தொழிலில் பயன்படுத்தப்பெறும் சொற்களைத் தொகுத்துத்தரும் தொழில்துறை அகராதி எனவும், மொழியில் காணப்பெறும் கொச்சையான சொற்களைத் தொகுத்துத்தரும் கொச்சைமொழி அகராதி எனவும், குறிப்பிட்ட குழுவினர் மட்டுமே பயன்படுத்தும் சொற்களை விவரிக்கும் குழுமொழி அகராதி எனவும். எளிதில் பொருள் விளங்காத சொற்களைத் தொகுத்துத்தரும் விளங்காமொழி அகராதி எனவும் வகைப் படுத்தலாம்.

அகராதிச்சொல்லின் நிலை அடிப்படையில் மேலும் சிறப் பகராதிகளை மொழியின்கண் காணப்பெறும் மரபுத்தொடர்களைத் தொகுத்துத்தரும் மரபுத்தொடர் அகராதி (dlctionary of ldioms) எனவும், குறிப்புப்பொருள் தொடர்களை விவரிக்கும் குறிப்புப்பொருள் தொடர் அகராதி (dictionary of phrases) எனவும், அருகிய வழக்குடைய சொற்களைத் தொகுத்துத்தரும் அருகிய வழக்குச்சொல் அகராதி (dictianary of archaic words) எனவும், மொழியில் வழக்கிறந்த சொற்களை விவரிக்கும் வழக்கிறந்தசொல் அகராதி எனவும், மொழியில் புதிதாகத் தோன்றியுள்ள சொற்களைத் தொகுத்துத்தரும் புதுவழக்குச்சொல் அகராதி எனவும், பிற மொழிகளிலிருந்து கடன்பெற்ற சொற்களை விவரிக்கும் கடன்சொல் அகராதி எனவும் பாகுபாடு செய்யலாம்.

இன்னமும் இவற்றை ஒலிக்குறிப்புச் சொற்களைத் தொகுத்துத் தரும் ஒலிக்குறிப்புச்சொல் அகராதி எனவும், மொழியிலுள்ள பழமொழிகளைத் தொகுத்துத்தரும் பழமொழி அகராதி எனவும், கல்வெட்டுக்களில் காணப்பெறும் சொற்களை விவரிக்கும் கல்வெட்டுச் சொல் அகராதி எனவும் ஒரு மொழியிலுள்ள புலவர்களின் பெயர்களைத் தொகுத்துத்தரும் புலவர் அகராதி எனவும் இடப்பெயர்களைத் தொகுத்துத்தரும் இடப்பெயர் அகராதி எனவும், இயற்பெயர்களின் தொகுதியினைச் சுட்டும் இயற்பெயர் அகராதி எனவும், குடிப்பெயர்களைத் தொகுத்துத்தரும் குடிப்பெயர் அகராதி எனவும், ஒலி நிலையில் குறைந்த வேறுபாடுடைய சொற்களை விவரிக்கும்

குறை ஒலி இணைச்சொல் அகராதி (dictionary of minimal pairs) எனவும், தொகை எண்களால் சுட்டப்பெறுவனவற்றை விளக்கும் தொகை அகராதி எனவும், செய்யுட்கேற்ற எதுகைத் தொடைச் சொற்கள் தரப்பெறும் தொடை அகராதி எனவும் வகைப்படுத்தலாம்.

இவை தவிர அகராதிச்சொல்லின் நிலையினை அடிப்படையாகக்கொண்டு ஒரு புலவரின் படைப்புக்களில் அன்றித் தனியொரு இலக்கியப் படைப்பில் காணப்பெறும் சொற்களைத் தொகுத்துத் தரும் விளக்கநிலை அகராதி (exegetic dictionary) எனவும். இன்றியமையாத சொற்களை அடி, இடம் சுட்டும் சொற்கோவை அகராதி எனவும், இன்றியமையாத பொருள்களின் அடிப்படையில் அமைந்த பொருட்கோவை அகராதி எனவும். மொழியினைக் கற் போருக்குப் பயன்படும் வகையில் பட விளக்கங்களுடன் அமையும் மொழி பயில்வோர் அகராதி எனவும் சிறப்பகராதிகளைப் பகுக்கலாம்.

மேலும் சிறப்பகராதிகளை அவை உள்ளடக்கும் அகராதிச் சொல்லின் நிலையினை அடிப்படையாகக் கொண்டு ஒரு நூலின் அருஞ்சொற்களுக்கு மட்டும் பொருள் கூறும் அருஞ்சொல் அகராதி எனவும், அடுக்குமொழிகளைத் தொகுத்துத்தரும் அடுக்குமொழி அகராதி எனவும், புலவர்கள், இலக்கியங்கள் ஆகியவற்றின் கால விளக்கக் குறிப்புக்களை அறிந்துகொள்ளத் துணைபுரியும் காலக் குறிப்பு அகராதி எனவும், மேற்கோள்கள் பயன்படுத்தப் பெற்ற இடங்களைச் சுட்டிக்காட்டும் மேற்கோள் அகராதி எனவும் வகைப் படுத்தலாம்.

சிறப்பகராதிகளை அகராதிச் சொல்லின் வடிவ அடிப்படையில் அகராதிச் சொல்லின் வரிவடிவினைச் சுட்டும் வரிவடிவ அகராதி (Orthographic dictionary) எனவும், சொற்கள் ஒலிக்கப்பெற வேண்டிய முறையினைக் குறிக்கும் ஒலிப்புமுறை அகராதி எனவும், அடிச்சொல்லோடு ஒட்டுக்கள் இணைந்து சொற்கள் அமையப்பெறும் நிலையினை விளக்கும் சொல்லாக்க அகராதி (derivational dictionary) எனவும், ஒரு மொழியின் இலக்கண அமைப்பினைத் தெரிந்துகொள்ளும் வகையில் இலக்கணக்கூறுகள், பெயர்த்திரிபுகள் போன்றவற்றை விவரிக்கும் இலக்கண அகராதி எனவும் பாகுபாடு செய்தல் இயலும்.

மேலும் இவ்வடிப்படையில் சிறப்பகராதிகளை சொல்லின் இறுதிநிலையிலிருந்து அகர நிரல் பின்பற்றப்பட்டுச் சொற்கள் விளக்கப் பெற்றிருக்கும் இறுதிநிலை அகரநிரல் அகராதி (reverse

dictionary) எனவும், சுருக்கக் குறியீடுகளுக்கு முழுமையான வடிவங்களை விவரிக்கும் சுருக்கெழுத்து அகராதி (dictionary of abbreviations) எனவும் வகைப்படுத்தலாம்.

சிறப்பு அகராதிகளைப் பொருளடிப்படையில் ஒரே பொருளைச் சுட்டப் பயன்பெறும் சொற்களைத் தொகுத்துத்தரும் ஒருபொருள் பலசொல் அகராதி எனவும், எதிர்ப்பதச் சொல்லைத் தொகுத்துத் தரும் எதிர்ப்பதச்சொல் அகராதி எனவும், பொருள் தொடர்புடைய சொற்களைக் கோவைப்படுத்திக் கூறும் ஒழுங்குமுறை அகராதி (systemic dictionary) எனவும், சொல்லின் ஒன்றிற்கு மேற்பட்ட தொடர்புடைப் பொருள்களைச் சுட்டும் தொடர்புடைப் பலபொருள் ஒருசொல் அகராதி (dictionary of polynyms) எனவும், சொல்லின் ஒன்றிற்கு மேற்பட்ட தொடர்பிலாப் பொருள்களைச் சுட்டும் தொடர்பிலாப் பலபொருள் ஒருசொல் அகராதி (dictionary of homomonyms) எனவும் பகுக்கலாம்.

இன்னமும் பொருளடிப்படையில் சிறப்பகராதிகளைச் சொற்பொருள் வருகையின் எண்ணிக்கை அடிப்படையில் சொற்கள் அமையப்பெறும் சொல்வருகை எண்ணிக்கை அகராதி (dictionary of frequency counts) எனவும், ஒரு கருத்து வெவ்வேறு இலக்கியங்களில் எப்படி எதிரொலிக்கின்றது என்பதனைச் சுட்டும் கருத்து வருகை அகராதி (thematic dictionary) எனவும், சிலேடைச் சொற்களையும் அவற்றின் வெவ்வேறு பயன்பாட்டினையும் குறித்து நிற்கும் சிலேடைச்சொல் அகராதி எனவும் வகைப்படுத்தலாம்.

அகராதிச்சொல் மொழியில் பயன்படும் அடிப்படையில் சிறப்பகராதிகளை அகராதிச்சொல் எந்தந்த சொற்களோடு மொழியில் வரப்பெறும் என்பதனைச் சுட்டும் வருகை வழக்கு அகராதி (dictionary of collocations) எனவும், அகராதிச்சொல்லின் முறையான பயன்பாட்டினைச் சுட்டும் செம்மைவழக்கு அகராதி (dictionary of usages) எனவும், அன்றாட வாழ்வில் பெரிதும் பயன்படுத்தப் பெறும் சொற்களைத் தொகுத்துத்தரும் நிகழ்வழக்குச்சொல் அகராதி (dictionary of current and common words) எனவும் வகை செய்யலாம்.

சிறப்பகராதிகளின் தோற்றம் மொழி வளர்ச்சியினை நன்கு புலப்படுத்தும். இருமொழி அகராதிகளாக அமையும் சிறப்பகராதிகள் அறிவியல். கலையியல் பிரிவுகளைத் தாய்மொழியில் கற்பிக்கப் பெரிதும் துணைபுரியும் என்பதால் இவற்றினை உருவாக்கும் பணி இன்றியமையாதது.

சங்க இலக்கியத்தில் பொருளியல் நோக்கு

—டாக்டர் நா. பாலுசாமி

முன்னுரை :

சங்ககாலம் என்பது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடங்கி கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியாகும். இக் காலத்தில் தமிழில் தோன்றிய சிறந்த இலக்கண இலக்கியங்கள் பலவாகும். அவற்றுள் தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை பத்துப்பாட்டு, இரட்டைக்காப்பியங்கள் முதலியன குறிப்பிடத்தக்கன வாகும். இச்சங்க நூல்கள் தமிழ் மொழியின் சிறப்பை உணர்த்து வதோடு தமிழர்தம் அரசியல், பொருளியல், கலையியல், பண்பாட் டியல் முதலிய பல்வேறு வாழ்வியல் கூறுகளையும் புலப்படுத்துவன வாகும். இக்காலத்தில் முடியாட்சி நிலவியது என்பது வெள்ளிடை மலை. எண்ணற்ற அரசியற் கருத்துக்களை இலைமறை காய் போலச் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணலாம். அவ்வாறே தமிழர்தம் பொருளியல் கருத்துக்களும் பலவாகக் காணப்படுகின்றன.

பொருளாதாரம் என்பது இன்று ஒரு பெருங் கலையாக வளர்ந்துள்ளது. சங்க காலத்தில் தமிழர்தம் பொருளியற் கருத்துக்கள் கலையினது கட்டுக்கோப்பைப் பெறவில்லை எனினும், அவர்தம் கருத்துக்கள் இக்காலப் பொருள்நூல்கள் கூறும் கருத்து நுட்பங் களுக்குப் பேரளவு ஈடுகொடுக்கத் தக்கவை என்பது ஒருதலை. இவ் வுண்மையை எடுத்துக்காட்டுவதே இவ்வாராய்ச்சிக் கட்டுரையின் நோக்கம்.

அரசுப்பொருளாதாரம்

அரசுப்பொருளாதாரம் என்பது ஓர் அரசாங்கத்தினது பொரு ளாதார நிலையைக் கூறுவதாகும். இதனை நாட்டுப் பொருளாதாரம் என்றும், பொதுப்பொருளாதாரம் என்றும் கூறலாம். இப்பொருளா தாரக் கூறு இன்று ஒரு பெருங்கலையாகக் கருதப்படுகின்றது. ஒரு நாட்டின் அரசாங்கம் இயங்குவதற்குரிய மூலாதாரம், அதன் வரவு செலவு, வருவாய்க்குரிய வழிகள், செலவாகும்விதம், எவ்வாறு செலவு செய்தல் வேண்டும் என்ற முறை இன்ன பிறவற்றை விரிவாகக் கூறுவது இப் பொருளாதாரக் கலையின் பணியாகும்.

பொருளாதாரம் தனிப்பொருளாதாரம், பொதுப் பொருளாதாரம் என இரு வகைப்படும். தனிப்பொருளாதாரம் என்பது குடும்பப் பொருளாதாரம். பொதுப்பொருளாதாரம் என்பது நாட்டுப் பொருளாதாரம். இவ்விரண்டினுக்குமிடையே உள்ள ஒற்றுமைகள் சில; வேற்றுமைகள் பல இவற்றை விரிப்பது இங்கு மற்றொன்று விரித்தலாக முடியும். ஆகவே, பொதுப்பொருளாதாரமாகிய நாட்டுப் பொருளாதாரத்தின் பல்வேறு கூறுகளையும் ஈண்டு ஆராய்வோம்.

நாட்டுப் பொருளாதாரம் அல்லது அரசுப் பொருளாதாரம் என்பது இருபெரும் பிரிவுகளுள் அடங்கும். ஒன்று வருவாய் பற்றியது; மற்றொன்று செலவு பற்றியது. ஒரு நாட்டிற்குரிய பொருள்வருவாய் என்பது அந்நாட்டு மக்கள் தரும் வரி அல்லது கடமை முதலியனவாகும். பொருளின்றித் தனிமனித வாழ்க்கை இல்லையாதல் போல ஓர் அரசும் பொருளின்றேல் இயங்காது.

''பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்.''

என்பார் வள்ளுவர். இப்பொருளை அரசு எவ்வாறு ஈட்டுவது? உலகில் நாகரிகம் தொடங்கிய நாள் முதல் ஓர் அரசு தனக்குரிய பொருளை மக்களிடமிருந்து பல்வகை வரிகள் வாயிலாகப் பெறுகிறது. அரசு இதற்கென வரிவிதிப்புக் கொள்கைகளையும் வரையறை செய்து கொள்கிறது. இவ் வரிவிதிப்புக் கொள்கை, ஆராயுமிடத்து, மக்களிடையே நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சமன் செய்யவும் பயன்படுகிறது.

வருவாய்க்குரிய வழிகள்

ஒரு நாட்டினது அல்லது அரசினது வருவாய்க்குரிய வழிகள் மிகப் பலவாகும். அவற்றுள் ஒன்று மக்களிடமிருந்து பெறும் வரிகள் என்பதனை முன்னர்க் கண்டோம். அவ்வரிகள் யாவை? தமிழ் நூல்களில் வரி பற்றிய பல்வேறு கலைச்சொற்கள் காணப்படுகின்றன. இறை, திறை, இரவு, கடமை, குடிமை, ஆயம், கொண்டி, உறுபொருள், உல்குபொருள் முதலிய சொற்கள் மக்கள் அரசுக்கு வழங்கும் பல்வேறுபட்ட வரிகளைக் குறிப்பனவாகும். இக்கலைச் சொற்கள் நுட்பமான பொருள் வேறுபாடுகள் கொண்டு வழங்கப்பட்டன. எனவே இவற்றை ஆழமாகச் சிந்தித்தல் வேண்டும். இவை தமிழ்மொழியின் சொல் வளத்தை எடுத்துக்காட்டுவதோடு அம்மொழியின் நுட்ப திட்பங்களையும் புலப்படுத்துவனவாகும். தமிழர்தம்

பொருளாதாரச் சிந்தனைகள் எத்துணை விரிவும் விளக்கமும் உடையன என்பதும் நன்கு புலப்படும்.

வரிகள்

(அ) **இறை** : இஃது இறைவன் அல்லது அரசனுக்கு மக்களால் வழங்கப்படுவது எனப்பொருள்படும். அக்காலத்தில் அரசன் இறைவன் என்று கருதப்பட்டான். ''உலகபாலர் உருவாய் நின்று உலகங் காத்தலின் 'இறை' என்றார்'' என்பது பரிமேலழகரது உரைவிளக்கம். 'இறு' என்பதன் அடியாகப் பிறந்த 'இறை' என்பது மக்களால் இறுக்கப்படுவது அல்லது வழங்கப்படுவது என்னும் பொருளதாகும் இது பெரும்பாலும் நிலத்தின் மீது விதிக்கப்படும் வரியாகும். நிலமுடையார் யாவரும் அரசுக்கு நிலவரி இறுத்தல் வேண்டும் என்பது அன்று முதல் இன்று வரையுள்ள நடைமுறையாகும். 'இறையிலி நிலம்' என்னும் தொடர்ப் பொருளும் ஈண்டு நோக்கத்தகும்.

(ஆ) **திறை** : திறை என்பது தோற்ற மன்னர்கள் வென்ற மன்னர்களுக்கு ஆண்டு தோறும் வழங்கும் பொருளாகும்.

''பணிந்தோர் தேஎந் தம்வழி நடப்பப்
பணியார் தேஎம் பணித்துத்திறை கொண்மார்''

என்னும் மதுரைக்காஞ்சி அடிகள் இதனை வலியுறுத்தும்.

(இ) **இரவு** : இஃதும் ஒரு வகை வரியாகும். இது மக்கள் முறையாகக் கட்ட வேண்டியதன்று. சில சூழ்நிலைகளில் மக்களிடமிருந்து கட்டாயமாகப் பெற வேண்டிய பொருள் இதனுள் அடங்கும் மக்களது விருப்பம், விருப்பமின்மைக்கு அப்பாற்பட்ட நிலையில் ஓரளவு அச்சுறுத்தலின் வாயிலாகக் கொள்ளப்படுவது இரவு எனப்படும். ஆறலை கள்வர் வழிப்போக்கரிடமிருந்து வலிதிற் பறிக்கும் கொள்ளைப்பொருள் போன்றதாகும் இது.

''வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு''

என்னும் குறட்பா இதற்கு எடுத்துக்காட்டு. இதற்குப் பரிமேலழகர், 'வேலொடு நின்றான் என்றதனால் பிறரொடு நில்லாமையும், இரவு என்றதனால் இறைப்பொருள் அன்மையும் பெற்றாம். தாராக்கால் ஒறுப்பல் என்னும் குறிப்பினன், எனக்கூறும் விளக்கவுரை இதனை

மேலும் வலியுறுத்தும். ஆயின், ஒருசார் ஆராய்ச்சியாளர் நாட்டில் ஏற்படும் எதிர்பாராச் சூழ்நிலைகள் காரணமாக அரசு செல்வர்கள் பால் வேண்டிப் பெறும் அல்லது இரந்து பெறும் சிறப்புப் பொரு ளாகும் என்பர். இஃது இக்கால வழக்கில் நன்கொடை எனப்படும். எது எவ்வாறாயினும், இரவு என்பது அரசுக்கு வழங்கப்படும் சிறப்பு வரிப்பொருள் எனவே கொள்ளப்படும்.

(ஈ) **புரவு** : புரவு என்பது புரத்தல் அல்லது காத்தல் எனப் பொருள்படும். எனவே, இது ஒரு காப்பு வரியாகும். நாட்டில் யாதானும் ஒரு பகுதியினர் சிறப்பாகப் புரக்கப்பட வேண்டுமெனில் அப்போது அரசு ஒருவகைச் சிறப்பு வரி விதிப்பதுண்டு குறிப்பாக, ஒரு நெருக்கடிநிலை தோன்றுகிற போது அதனைப் பொருளாதார முறையில் சந்திப்பதற்கு இத்தகைய புரவு விதிக்கப்படுவதுண்டு. 'குடிபுரவு இரக்கும்' என்னும் புறநானூற்றுத் தொடர் இதனை நன்கு விளக்கும்.

(உ) **கடமை !** இதன் சொற்பொருள் உரிமை என்பதன் மறுதலைப் பொருளாகும். ஒவ்வொரு குடிமகனும் அரசுக்குச் சில கடமைகள் ஆற்ற வேண்டும். அக்கடமை உழைப்பாகவும் இருக் கலாம்; பொருளாகவும் இருக்கலாம். இதனையே, இக்காலத்தார் நிலவரி என்பர். இஃது ஒருவனது நிலவுடைமையால் ஏற்படும் கடமையாகும். இறை என்பதும் கடமை என்பதும் ஒரே வகையான வரியைக் குறிப்பதற்குப் பல்வேறு காலகட்டங்களில் வழங்கப்பட்ட ஒருபொருட்கிளவிகளாகும்.

(ஊ) **குடிமை** : இது குடி அல்லது குடும்பம் என்பன வற்றோடு தொடர்புடைய சொல். சமுதாயத்தில் தனிமனிதன் சிறப் புக்குரிய அங்கமாகக் கருதப்படுவதில்லை. அவன் இல்லறம் ஏற்றுக் குடும்ப வாழ்வு நடத்தும் நிலையில்தான் அரசு அவனைச் சமுதாயத் தின் அங்கமாக மதிக்கிறது. அவன் நாடோடியாகத் திரியாமல் அவன் மனையறம் மேற்கொள்ளுபபோது தனக்கென வீடமைத்துத் தங்குகிறான். அவனது குடும்ப உடைமையாகிய வீடு, வீட்டுமனை ஆகியவற்றின் மீதும் அரசு வரி விதிக்கிறது. குடி மீது விதிக்கப் பட்ட வரி குடிமை எனப்பட்து. ஆயின். வரலாற்றுப் பேரறிஞராகிய நீலகண்ட சாத்திரியார் இதனை மக்கள் அரசுக்குப் பொதுவாக வழங்கும் வரியைக் குறிப்பதாகவே கொண்டார்.

(எ) **ஆயம்** : திருவள்ளுவர் காலத்தில் சூதாட்டத்தில் பங்கு

பெறும் இருவர் வரையறுத்துக் கொள்ளும் பந்தயப் பொருளே ஆயம் எனப்பட்டது சூதாட்டத்தில் வென்றவன் தோற்றவன்பால் பெற்ற தொகை ஆயமாயிற்று. காலப்போக்கில் ஆயம் என்பது பொருள் மாற்றம் பெற்றது. மக்களுள் ஒரு சாரார் தத்தம் தொழில் நிமித்தம் அரசுக்கு வழங்கும் தொழில் வரி ஆயம் என்று அழைக்கப்பட்டது. ஆடை வெளுத்துத் தரும் தொழிலாளி தான் துவைப்பதற்குப் பயன் படுத்தும் கல்லின்மீது வரி செலுத்தியமை காணப்படுகிறது. இது கல்லாயம் எனப்பட்டது. வரலாற்றுப் பேரறிஞர் மகாலிங்க சாத்திரி யார் தமது **தென்னிந்திய ஆட்சி முறை** என்னும் ஆங்கில நூலில் இதனை விவரித்துள்ளார்.

(ஏ) **கொண்டி** : சங்க காலத்தில் அரசர்களுக்கு இடையே நடந்த கடற்போரில் வென்ற அரசன் தோற்றவனிடமிருந்து கொண்ட பெரும்பொருள் கொண்டி எனப்பட்டது. இது போர் குறித்த ஒன்றே யாகும். அமைதிக் காலத்தில் இது பற்றிய பேச்சில்லை. 'கொண்டி வேண்டுவனாயின்' என்னும் புறநானூற்றுத் தொடர் இதனை மெய்ப் பிக்கும்.

(ஐ) **உறுபொருள்** : இது வரி அன்று. ஆயினும் இதுவும் அரசுக்குரிய பொருளே. செல்வர் வழித்தோன்றல்களின்றி இறப்பரேல் அவர்கள் ஈட்டி வைத்த பொருளும், பிற உடைமைகளும் அரசின் உடைமைகள் ஆயின. அன்றியும் கண்டெடுக்கப்படும் அல்லது தோண்டி எடுக்கப்படும் பொருட்குவைகள் அரசுக்கே உரியவாயின. இவ்வாறு வரும்பொருள் உறுபொருளாம்.

> ''உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
> தெறுபொருளும் வேந்தன் பொருள்''

என்னும் குறளும், அதற்குப் பரிமேலழகர், 'வைத்தார் இறந்து போக நெடுங்காலம் நிலத்தின்கண் கிடந்து பின் கண்டெடுத்த தூஉம், தாயத்தார் பெறாத தூஉமாம்' எனவுரைக்கும் விளக்கமும் இங்கு நோக்கத்தகும்

(ஒ) **உல்குபொருள்** : இது இக்காலத்து வழங்கி வரும் வணிக வரி, சுங்க வரி போன்றதாகும். ஒரு நாட்டிலிருந்து பிற நாட்டுக்கு ஏற்றுமதியாகும் பொருள் மீதும் இறக்குமதியாகும் பொருள்மீதும். விதிக்கப்படும் வரி சுங்க வரியாகும். இத் தொடருக்குப் பரிமேலழகர், 'சுங்கமாகிய பொருளும்' என்று கூறிப் பின்னும்; சுங்கம் — கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது' எனக் கூறும் விளக்கம் இங்கு மனங்கொள்ளத்தகும்.

(ஓ) **தெறுபொருள் :** தெறுதல் என்பது பகைவெல்லுதல் எனப்பொருள் படும். இதுவும் போர்க்காலத்தில் தோற்றவனிட மிருந்து வென்றவன் போர்க்களத்தே வாரிக்கொண்டு வரும் பொருளாகும். இப்பொருளை அரசன் அரசுடைமையாகக் கருதாது தனக்கு வெற்றி விளைவித்த வீரர்களுக்குப் பகிர்ந்து தரப்பட்ட பொருளாகும். இது கொண்டியினும் வேறுபட்டது. கொண்டியும் தோற்ற அரசன்பால் பெறுவதாயினும் அஃது அரசுக்கே உரியதாம்.

இதுகாறும் அரசுக்குரிய பொருள் வரும் பல்வேறு வழிதுறைகளும், வரிவகைகளும் ஆராயப்பட்டன. இனி, அரசு விலக்கத்தகும் சில வரவினங்கள் பற்றிச் சிந்திப்போம்.

திருவள்ளுவர் ஓர் அரசு எவ்வெவ்வகையில் பொருளீட்ட முற்படுதல் தகாது என்பதனை வலியுறுத்திக் கூறியுள்ளார். வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, சூது. ஆகிய மூன்று அதிகாரங்களும் அரசுக்கு விலக்கப்பட்ட பொருள் பற்றி விரித்துரைக்கின்றன. கள்ளின் மீதும், வரைவின் மகளிர் மீதும், சூதாட்டத்தின் மீதும் வரி விதிப்பதன் வாயிலாக அரசுக்குப் பெரும்பொருள் கிடைக்கலாம். கௌடில்லியர் தமது அர்த்த சாத்திரத்தில் இவற்றை வரவேற்றிருப்பவும் திருவள்ளுவப் பெருந்தகை இவற்றை விலக்கி யுள்ளமை நினைந்து மகிழத்தகும் ஓர் அரசின் கடமை அங்கு வாழும் மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதேயாம். வாழ்க்கை நலமாவது ஒருவனது உடலையும், உள்ளத்தையும் பொறுத்தது. மேற்கண்ட மூன்றனுள் கள்ளும், வரைவின் மகளிரும் உடல்நலக் கேட்டுக்குக் காரணம். சூது ஒருவனது உள்நலத்தைக் கெடுக்கும். அன்றியும் மக்களை எளிய முறையில் வேகமாகக் கவர்ந்து ஈர்த்து அவர்களைக் கெடுப்பவையாகும் இவை. எனவே, வாழ்வாங்கு வாழ வைக்க விரும்பிய வள்ளுவப் பெருந்தகை இம்முத்தீமைகளையும் கடிந்தொழிந்தார். 'குடி குடிகெடுக்கும், குடிப் பழக்கம் உடல் நலத்தைக் கெடுக்கும்' எனும் விளம்பரத்தையும் தொங்க விட்டு கள்ளுக்கடைகளைத் திறப்பதும், அதன் வாயிலாகப் பொருள் ஈட்டுவதும் வள்ளுவர் உள்ளத்தைப் புண்படுத்துவதாகும்.

'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்'
'சூதின், வறுமை தருவதொன் றில்'
'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு'

என்று வள்ளுவர் கூறியிருப்பதும், இவை அங்கவியலுள் கூறப்பட்டிருப்பதும் சிந்திக்கத்தகும்.

'மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்'

என்ற மணிமேகலை அடிகளும் கவனத்தில் கொள்ளத்தக்கன. எனவே, தமிழ்ப் பண்பாடு, மக்களுக்கு நல்வாழ்வு தரும் நல்லொழுக்க நெறிப் பட்ட பொருளியல் கொள்கையையே சங்ககாலம் தொடங்கி வலியுறுத்தி வருகின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி ஆகும்.

செலவினங்கள் :

திருவள்ளுவர். ஓர் அரசு தனக்குரிய பொருள் வரும் வழிகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதையும், அவ்வாறு வந்து ஈண்டிய பொருளை எவ்வாறு செலவிடுதல் வேண்டும் என்பதையும் ஒரு குறட்பாவில் வெளிப்படுத்தியுள்ளார்.

''இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு''

என்பது அக்குறட்பா. இதில் வகுத்தல் என்னும் தொடர் சிந்தனைக்கு உரியது. ஓர் அரசு எவ்வெவ்வினங்களுக்குச் செலவு செய்தால் அதனால் மக்களுக்கு நிறைந்த நன்மைகள் ஏற்படும் என்பதனை உணர்ந்து கொள்ளுதல் இன்றியமையாதது. டால்டன் என்ற மேனாட்டுப் பொருளாதார மேதை இதுபற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்: ''பொருளாதாரம் என்பது ஒரு கலை நூல்; அறிவியல் என்றும் அதனை அழைக்கலாம். சில ஒழுக்க நெறிமுறைகள் இக் கலை நூலில் வற்புறுத்தப் படுவதோடன்றி அடிப்படையான ஒரு பேருண்மையையும் அது புலப்படுத்த வேண்டும். அதாவது, சமுதாயத்தில் வாழும் பெரும்பாலான மக்களுக்கு மிகப்பல நன்மைகள் விளையும் அளவுக்குப் பொதுப்பொருளைச் செலவிடுவதே ஒரு நல்ல அரசின் தலையாய பணியாகும்.''

ஓர் அரசு நாட்டின் பாதுகாப்பு, அதன் வளர்ச்சி, வாணிப முன்னேற்றம் ஆகிய மூன்று துறைகளில் பெரிதும் கவனம் செலுத்த வேண்டும். இதற்குச் செலவாக்கப்படும் பொருள் நிறைந்த பயனை விளைவிப்பதாகும். படைகளைப் பேணி நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் தோன்றும் பகையை உரிய காலத்தில் களைவது அரசின் முதற் கடமையாகும். திருவள்ளுவர் படைமாட்சி, படைச்செருக்கு என்ற இரண்டு அதிகாரங்களை அமைத்துக் கூறும் நோக்கம் சுட்டுக்குரிய

தாகும். ஒரு நாடு உரிமை இழக்காமல் வாழ வேண்டுமாயின் அதற்கு ஏற்ற படை வன்மை வேண்டும். ஓர் அரசுக்குரிய அங்கங்கள் ஆறனுள்ளும் படையை முன்வைத்துக் கூறும் திருவள்ளுவரது நோக்கம் இதுவேயாம். அமைதிக் காலத்தும் போர்க்காலத்தும் படைகளைப் பேணிக் காத்தற்குப் பெரும்பொருள் செலவாகும். இது தவிர்க்க முடியாத செலவினமாகும்.

மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் வளத்திற்கும் ஏற்ற பல்வேறு சமுதாயத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டியது அரசின் மற்றொரு கடமையாகு. குளம் தொட்டு வளம் பெருக்குவதும், காடு கொன்று நாடாக்குவதும், இன்ன பிறவும் அக்கால அரசுகள் மேற்கொண்ட பல்வேறு சமுதாயத் திட்டங்களாகும். கரிகால் பெரு வளத்தான் செயல் இங்குக் கவனிக்கத்தக்கது.

''வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினும் நண்ணி யாளும்
இறைவன் தாட்குத வாதே அதனால்
அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவண்தட் டோரே
தள்ளா தோரிவண் தள்ளா தோரே''

என்னும் புறநானூற்று அடிகள் இதனை மேலும் வலியுறுத்தும். மேலும், நாட்டில் நடைபெறும் வாணிபம் முதலிய பல்வேலு தொழில் துறைகளைக் கண்காணித்தற்கும், நெறிப்படுத்தற்கும் கரிகாலன் போன்ற அக்கால அரசர்கள் பல்வேறு அலுவலர்களையும், மேற்பார் வையாளர்களையும் பணி கொண்டான் என்பது இலக்கியச் சான்று. பட்டினப்பாலையுள் கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

''வேலாழி வியன்றெருவின்
நல்லிறைவன் பொருள்காக்கும்
தொல்லிசைத் தொழில்மாக்கள்''

என்று குறித்திருப்பது மனங்கொள்ளத் தகும்.

இறுதியாக, அக்கால அரசர்கள் பல்வேறு கவிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் அரசின் சார்பில் பொருள் வழங்கிச் சிறப்பித்தார் கள். கவிஞர்கள் அக்காலத்தில் சான்றோர்கள் என்று அழைக்கப் பட்டார்கள். 'சங்கச் சான்றோர்' என வழங்கப் படுவது காண்க. சங்கப் புலவர்கள் கஞ்சிக்குக் கவி பாடியவர்கள் அல்லர். அரசுகளும்

மக்களுக்கும் இடையே நல்ல உறவினை வளர்த்த பண்பாளர்கள் அவர்கள். அவர்கள் நம்பிக்கைக்கு உரிய உண்மையான மக்கள் தொண்டர்களாக விளங்கினார்கள். அரசு தவறு செய்யுமாயின் இடித் துரைத்தலும், நன்மை செய்யின் பாராட்டி மகிழ்தலும் அவர்களது பண்பாகும். மக்கள் குறைகளையும் சமுதாயத்தில் அவ்வப்போது நிலவும் நலிவு மெலிவுகளையும் உரிய காலத்தில் அரசின் கவனத் திற்குக் கொண்டு வருதலைத் தமது கடமையாகக் கொண்டார்கள். இவ்வாறாக, அறம், பொருள், இன்பங்களின் பொருட்டு மன்னன் நாட்டின் செல்வத்தைச் செலவிட்டான் என்பது கண்கூடு.

பழங்கடன் நீக்குதல்:

இக்காலத்தைப் போலவே அக்காலத்திலும் வேளாண்குடி மக்களே பலராக இருந்தனர். உழவுத்தொழிலே உயிர்த்தொழிலாகக் கருதப்பட்டது. மழைபொய்த்தல் முதலிய பல்வேறு காரணங்களால் சில ஆண்டுகளில் விளைவு பாதிக்கப் பட்டதுண்டு. வேளாண் மக்கள் அதனால் பேரிழப்புக்கு ஆளாயினர். தாம் பட்ட கடன்களை அரசுக்குத் திருப்பிச் செலுத்த முடியாமல் இடர்ப்பட்டனர். இத்தகு காலகட்டங்களில் சங்கப் புலவர் சிலர் துணிவுடனும், சமுதாய உணர் வுடனும் அரசனை நேரில் கண்டு மக்கள் குறைகளை எடுத்துக் கூறி அவர்களின் கடன்களை நீக்கி விடுமாறு வேண்டிக் கொண்டனர் என்ற செய்தி புறநானூற்றுப் பாடல் ஒன்றில் சித்திரிக்கப்பட்டுள்ளது என்பது யாவரும் அறிந்ததே. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை வெள்ளைக்குடி நாகனார் கண்டு உழவர்தம் பழங் கடன் நீக்கப் பாடிய புறநானூற்றுப் பாடலின் பின்வரும் அடிகள் நினைவில் கொள்ளத்தக்கவை:

''பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி,
குடி புறந்தருகுவை ஆயின், நின்
அடி புறந்தருகுவர், அடங்கா தோரே''

நூல் மதிப்புரை

இந்திய விடுதலைக் காவியம்

(ஆசிரியர் : கவிஞர் பெ. கிருட்டிணன்; வெளியீடு : பூவழகி பதிப்பகம், 29/2 சீனிவாசப் பெருமாள் சன்னதி தெரு, இராயப்பேட்டை, சென்னை-14; பக்கங்கள் : 515; விலை : ரூ. 50-00).

இந்தியாவும் தமிழகமும் வளர்ந்து செல்லும் பாதையில், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளில் இணைந்து செல்லும் இன்றைய மனிதனின் மனம் பல செய்திகளை மறக்கத் துணிந்து விட்டது. இன்றைய இளைஞர் வரலாற்று நிகழ்ச்சிகளையும் முன்னோர்களின் தியாகங்களையும் மறக்கத் தொடங்கிவிட்டனர் என்பது கண்கூடு. இந்த நிலையில் 'இந்திய விடுதலைக் காவியம்' என்ற இந்த நூல் வெளிவந்திருப்பது தேவையான ஒன்றாகும்.

இந்திய நாட்டின் சுதந்திரத் தன்மைக்கு எந்தெந்தச் சூழல்களிலெல்லாம் ஊறு விளைந்தது என்பது பண்டைக் காலந்தொட்டு ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் வரையுள்ள காலப் பகுதியை எல்லையாகக் கொண்டு கூறப்படுகின்றது. அலெக்சாண்டரை எதிர்த்த புருடோத்தமன், கசினி முகமது, கோரி முகமதுவை எதிர்த்த வடபுல மன்னர்கள் பற்றிய செய்திகளையும், படிப்படியாக இந்நாடு அடிமைப் பட்டதையும் இந்நூலாசிரியர் இனிய கவிதை நடையில் கூறுகின்றார்.

இராமநாதபுரம் சேதுபதிகள், பூலித்தேவர், ஐதர் அலி, திப்பு சுல்தான், கட்டபொம்மன் போன்ற மன்னர்களின் வீரதீரப் பெருமையையும் ஆங்கிலேயரை எதிர்த்த போரில் அவர்களின் தியாக முடிவுகளையும் உணர்ச்சிச் செறிவான கவிதை நடையில் விளக்குகின்றார் கவிஞர். இம்மன்னர்கள் அரிய தியாகமும் வீரமும் பொருந்தியவர்கள் என்றாலும், பிற மன்னர்களின் உதவியும் ஒற்றுமையும் இவர்கட்குக் கிடைக்காததால், தோல்வி கண்டனர் என்பதைக் கவிஞர் விளக்குகிறார்.

பாஞ்சாலங்குறிச்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு, கேரளத்தில் விடுதலைப்போர், ஜான்சிராணி இலக்குமிபாயின் வீழ்ச்சி, 1857-இல் நடந்த விடுதலைப்போர்; அதன் தோல்விக்கான காரணங்கள், அந்தக் காலப் பகுதியில் நாட்டில் நிலவிய அரசியல் பொருளாதார நிலைகள், காந்தியடிகள் வரலாறு, காங்கிரசின் தோற்றம், திலகரின் வீரச் செயல்கள் முதலான பல செய்திகள் இக்காவியத்தில் விளக்கப்படுகின்றன.

—டாக்டர். ம. திருமலை

நூல் மதிப்புரை

கைவல்லிய நவநீத வசனம்

(ஆசிரியர்: டாக்டர் இரா. இராசகோபாலன்; அண்ணாநகர், மதுரை ரோடு, திருப்புத்தூர் (பசும்பொன்) 623 211 பக்கங்கள் 4+160; விலை ரூ 25/-)

வேதாந்த நெறியைத் தமிழில் விளக்க எழுந்த நூல்களுள் முன்னிடத்தைப் பெற்றுப் பெருஞ் செல்வாக்குடன் திகழும் நூல் கைவல்லிய நவநீதம். இதன் ஆசிரியர் தாண்டவராய சுவாமிகள்.

தாண்டவராயர் என்னும் பெயரில் இருவர் சமய இலக்கிய வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். ஒருவர் பாடுதுறை, மோகவதைப் பரணி, அஞ்ஞவதைப் பரணி, பிரமகீதை முதலிய பல வேதாந்த நூல்களைச் செய்தவர். அவர் காலம் 15-ஆம் நூற்றாண்டு. மற்றவர் அவருக்குப் பின்னே வந்தவர். அவரே கைவல்லிய நவநீதத்தைச் செய்தவர்.

உபநிடதங்கள் என்னும் பாற்கடலைக் கடைந் தெடுத்த வெண்ணெய் என்று கூறுதற்கு ஏற்ற வகையில் இந்நூல் அத்வைதக் கொள்கைகளைச் சுருக்கமாகவும் சுவையாகவும் கூறுகிறது. வேதாந்த நெறியில் இந்நூல் பெற்ற பெருமையை வேறு எந்த நூலும் பெற வில்லை என்று கூறும் அளவுக்கு மக்கள் மனத்தில் இடம் பெற்றுள்ளது.

பிறவிக்கு அஞ்சி, வீடுபெறத் துடிக்கும் பக்குவ முதிர்ச்சியுள்ள ஒருவன் 'கானவர் வலையிற்பட்டுக் கைதப்பி ஓடும் மான்போல்' விரைந்து சென்று ஞான சற்குருவை நாடிக் குறையிரந்து நிற்க, அவர் அவனுக்கு உண்மைப் பொருளை உணர்த்தித் தெருட்டுவதாக வினா விடை முறையில் இந்நூலை அமைத்துக் கொண்டு, தத்துவ விளக்கப் படலம், சந்தேகம் தெளிதல் படலம் என்ற இரு பகுதிகளில் அத்வைதக் கொள்கைகளை விளக்கியுள்ளார் ஆசிரியர். பாயிரத்தையும் சேர்த்து 288 பாடல்கள் உள்ளன. பாடல்கள் யாவும் எளிய சொற்களில் அமைந்து ஆற்றொழுக்குப் போலச் செல்கின்றன. தத்துவ விளக்கம் என்னும் வெயிலின் வெம்மை தோன்றாதபடி ஆங்காங்கே உவமைகள் என்னும் குளிர்தருவின் நிழலில் நம்மை இளைப்பாறச் செய்து

அழைத்துச் செல்லும் ஆசிரியரின் உத்தி வியந்து போற்றும்படியாக உள்ளது. இத்தகைய அருமையான நூலை மிக எளிமையான வசன மாக ஆக்கித் தந்து நமக்கெல்லாம் விருந்து படைத்துள்ளார் பேராசிரியர் டாக்டர், இராசகோபாலன்.

கைவல்லிய நவநீதம் முன்னே பல பதிப்புக்களைக் கண்டுள்ளது. பொன்னம்பல சுவாமிகள், அருணாசல சுவாமிகள், கோ. வடிவேலு செட்டியார் முதலியோர் அதற்குத் தெள்ளிய உரை கண்டுள்ளனர். அவ்வுரைகளைப் படித்து உளங் கொள்வதற்குச் சிறிது சமயநூற் பயிற்சி வேண்டும்; ஓரளவு மொழித் திறனும் வேண்டும்; இவற்றோடு பொறுமையும் சேரவேண்டும். இக்காலத்தில் இவற்றுக்கெல்லாம் எங்கே போவது? பழைய உரைவழியே போகாமல்-இக் கால மன நிலைக்கு ஏற்ற வகையில்-சமய நூற் பயிற்சியோ, மொழித் திறனோ, பொறுமையோ இல்லாதவரும் இந்நூலைப் படித்துப் பார்க்கத் தூண்டும் வகையில்—அத்துணை எளிமைப் படுத்தி, இனிமைப் படுத்திக் கொடுத்தல் இயலுமா? 'தடக் கையின் நெல்லிக் கனி'யெனத் தரல் இயலுமா? இயலும் என்பதைப் பேராசிரியர் **இராசகோபாலன்** தமது கைவல்லிய நவநீத வசன நூலில் காட்டியுள்ளார்.

பாடலைத் தந்து அதன்கீழே உரைநடையைத் தரும் முறையை மேற்கொள்ளாமல், உரைநடையே முழுதுந் தொடர்ந்து நடக்கும் படியாக நூலை அமைத்துள்ளார். இதனால் ஒரு கதையைத் தொடர்ந்து படித்தாற் போன்ற உணர்வையும் சுவையையும் ஏற் படுத்தி விடுகிருர்.

பொருளுக்குத் தகப் பொருத்தமான—சுவையான தலைப்புக்களை மகுடமாக இட்டுச் செல்லும் முறை, ஒருமுறை புரட்டிப் பார்ப்ப வரையும் வயப்படுத்திப் படித்துப் பார்க்கத் தூண்டுவதாக உள்ளது. எடுத்துக் காட்டுக்கு ஒன்றைப் பார்ப்போம். சந்தேகம் தெளிதல் படலத்தில் 58–ஆம் பாடற் பொருளுக்கு 'இரண்டு பறவைகள்' எனத் தலைப்பிட்டுப் பின்வருமாறு எழுதுகிறார். 'அசுவத்தம் (அரசு) என்றொரு மரம். அதில் (அதாவது உடம்பில்) இரண்டு பறவைகள் வாழ்கின்றன. ஒன்று (சீவன்) மரத்தின் கனிகளை நன்றாக இருக் கிறது என்று தின்கிறது. பிறிதொன்று, மதிப்பிற்கு உரிய பறவை (ஈசன்) கனியை நோக்கிய அளவுடனே தின்னாது இருக்கிறது;

இரண்டு பறவைகள் என்ற தலைப்பும், ஒன்று கனியைத் தின்னுதலும் மற்றென்று அதனைத் தின்னாது வாளாவிருத்தலும்

ஆகிய முரண் நயமும், அவை ஈசுவர சீவர்களைக் குறிப்பிடுவதாகிய உருவகமும், அவ் வுருவக வழியாக எழும் அத்வைத உண்மையும் படிப்போர் மனத்தில் நிலைத்து விடுகின்றன அல்லவா? உயரிய உபநிடதக் கருத்தாகிய இதனைக் கைவல்லிய நவநீத ஆசிரியர் எளிமைப் படுத்தித் தந்துள்ளார் என்றால் அதனை மேலும் எளிமை யாக்கி வசன வடிவில் தந்துள்ளார் பேராசிரியர்.

இவ் வசன நூலின் மற்றொரு சிறப்பு, 'தத்துவத்தை எண்ணித் தலையடித்துக்' கொள்ளாத படி, அதனை எண்பொருளவாகச் செலச் சொல்லி நம்மை அதன்கண் ஈடுபடும்படியாக வைத்து விடுதலாகும்.

கைவல்லிய நவநீதம் என்னும் நற்றாமரை மலர் நல்கும் அறிவு மணத்தை ஏந்தி உலவும் மெல்லிய பூங்காற்றாக விளங்கு கிறது இவ் வசன நூல். இதனை வயது வேறுபாடின்றி அனைவரும் பெற்று நுகரலாம்; கற்றுப் பயனுறலாம்.

டாக்டர். ஆ. ஆனந்தராசன்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1.	மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு	12-00
2.	பன்னூற்றிரட்டு	5-00
3.	தமிழ்ச் சொல்லகராதி	25-00
4.	மாறனலங்காரம் (பொருளணியியலுரை)	25-00
5.	பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்)	2-00
6.	குருகைமான்மியம்	10-00
7.	டி.சி. ஸ்ரீனிவாசய்யங்கார் நினைவு மலர்	1-00
8.	பெருந்தொகை	15-00
9.	செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு	
10.	செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு)	10-00
11.	**கோவை, கலம்பக நூல்கள்**	12-00

1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
2. மதுரை மும்மணிக் கோவை
3. சிராமலைக்கோவை
4. கலசைக்கோவை
5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
6. திருவருணைக் கலம்பகம்
7. குருமொழி வினாவிடை

12. **உலா நூல்கள்** — 10–00

1. திருவாரூருலா
2. திருச்சிறு புலியூர் உலா
3. விக்கிரம சோழனுலா
4. கடம்பர் கோவில் உலா
5. தேவையுலா
6. புலவராற்றுப்படை

13. **பாமாலை நூல்கள்** — 12–00

1. திருப்பணிமாலை
2. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
3. திருக்குற்றாலமாலை
4. திருப்புல்லாணிமாலை
5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
6. கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை
7. கலைசைச் சிலேடை வெண்பா
8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

14. **இலக்கிய நூல்கள்** 12-00

1. முத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3 திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (‘‘ ’’)
5. சங்கர நயினார் கோவில் அந்தாதி
6. திருத்தணிக்கைத் திருவிருத்தம்
7. நான்மணிக்கடிகை (மூலமும் உரையும்)

15. **இலக்கண நூல்கள்** 5-00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16 **மநிஷா பஞ்சகம்**

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ. 15–00. **செந்தமிழைக்** கண்ணுறும் தமிழன்பர்கள் சந்தாதார ராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத் தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு

1. புத்தகங்கள் வேண்டுவோர் தேவைக்கு எழுதும்பொழுது 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி. பி. பி. மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை-1.

★ திருப்பதி பிரிண்டர்ஸ், மதுரை-1.